The Good Pastor

நல்ல ஆயன்

“நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறாடுகளும் நமக்குண்டு.
அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே
ஆட்டுக்கிடை உண்டாகும்” (அரு. 10 : 11–16).

புத்தகம் 18. நவம்பர் 1920. இலக்கம் 11.

PURGATORY.
உத்தரிக்கிறஸ்தலம்.

சத்திய திருச்சபையானது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது மோட்ச வாசிகள், ஒட்டோலக சபையாரென்றும், 2-வது சாவானபாவமின்றி இறந்து உத்தரிக்கிறஸ்தலத்திலிருப்பவர்கள், உத்தரிக்கிற சபையாரென்றும், 3-வது இவ்வுலகிலுள்ள விசுவாசிகள், தங்கள் ஆத்தும சத்துருக்களுடன் போர்பொருதுவதால் யுத்த சபையாரென்றும் அழைக்கப்படுகிறார்கள். இம்மாதம் முதல் திகதியில் மோட்சவாசிகளை நாம் நினைவுகூர்ந்து, அவர்களுடைய புண்ய நடத்தையைக் கண்டுபாவித்து, நமக்காக அவர்கள் சர்வேசுரனிடத்தில் மனுப்பேச அவர்களை நாம் மன்றாடும்பொருட்டு சகல மோட்ச வாசிகளின் திருநாளை திருச்சபை நியமித்திருக்கிறது.

நமது பரிசுத்த தாயாகிற திருச்சபை உத்தரிக்கிறஸ்தலத்திலுள்ள ஆத்துமங்களை மறவாமல், நாம் உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காக நாடோறும் சர்வேசுரனைப் பார்த்து மன்றாடி வந்தபோதிலும், இம் மாதத்தின் இரண்டாம் திகதியை உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காக நியமித்து, அன்று சகல கிறீஸ்துவர்களும் விசேஷ விதமாக ஜெபதபங்களைப் புரிந்து, அந்தப் பரிசுத்த ஆத்துமங்களுக்காக ஒப்புக்கொடுத்து, அவர்கள் உத்தரிக்கிறஸ்தலத்தில் படுங் கொடிய வேதனையைக் குறைத்து, அவர்களுக்கு உதவி புரியும்படி திருச்சபை நமக்கு பிரேரித்து வருகிறது. இதைப்பற்றி குருக்கள் அன்று தினம் மூன்று திவ்யபூசைகளைச் செய்து சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி செய்கிறார்கள். இதே கருத்துக்காக இம்மாதத்தில் வரும் 2-ம் திகதிமாத்திரமல்ல, ஆனால் இம்மாதம் முழுதும் உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு, சகல விசுவாசிகளும் ஜெபதபம், தானதருமம், ஒருசந்தி உபவாசம் முதலிய சற்கிருத்தியங்களைப் புரிந்து, அவ்வாத்துமங்களுக்கு ஒப்புக்கொடுப்பதுடன், திவ்யபூசையைச் செய்வித்தும், பக்தியுடன் அதைக் கண்டும் அந்தப் பரிசுத்த ஆத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுத்துவருகிறார்கள். கர்த்தர் பிறப்பதற்கு முன்னிருந்த யூதரும் மரித்தவர்களுக்காக ஜெபங்களையும் பலிகளையும் ஒப்புக்கொடுத்தார்களென்று வேதாகமம் சாட்சி கூறுகிறது.

"இரக்க குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில், அவர்கள் இரக்கத்தை அடைவார்க" ளென்று நமது திவ்ய கர்த்தர் வசனித்திருக்கிறர். தேவ சாயலாக உண்டாக்கப்பட்டு, சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இரத்தத்தால் அர்ச்சிக்கப்பட்டு, சாவானபாவமின்றி சீக்கிரத்தில் மோட்சத்தில் பிரவேசிக்க இருக்கும் இந்தப் பரிசுத்த ஆத்துமாக்களுக்காக வேண்டிக்கொண்டு, அவர்களுடைய கொடூரவேதனையைக் குறைத்து, சீக்கிரத்தில் அவர்கள் மோட்ச இராச்சியம் போய்ச் சேரும்படி சகல பிரயாசைப்படும் நமதுமட்டில் சர்வேசுரன் எவ்வளவு தயவு இரக்கங்காட்டுவார்! பசித்திருப்பவர்களுக்கு ஆகாரமும், தாகமாயிருப்பவர்களுக்குத் தண்ணீரும், நிருவாணிகளுக்கு உடையும், துன்பப்படுகிறவர்களுக்கு சகாயமுஞ் செய்பவர்கள், தமக்கே அப்பேர்ப்பட்ட உபகாரங்கள் செய்கிறர்களென்றும், அதற்காக மோட்சத்தில் நிகரற்ற சம்பாவனை அவர்களுக்கு அளிக்கப்படுமென்றும் நமது திவ்ய கர்த்தர் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறர். காரியமிப்படியிருக்க, உத்தரிக்கிறஸ்தலத்தில் வாக்குக் கெட்டாத வேதனை அனுபவித்துவரும் திக்கற்ற அந்த ஆத்துமங்களுக்கு நாம் செய்யும் உதவி வீணய்ப் போகுமோ? நமது உதவியால் அந்தப் பரிசுத்த ஆத்துமங்களுடைய வேதனை குறைவுபட்டு, சீக்கிரத்தில் அவர்கள் பேரின்ப பாக்கியத்தைச் சுகிப்பதுடன், சர்வேசுரனும் நமதுமட்டில் தமது விசேஷ வரங்களைப் பொழிவாரென்று கூறத்தேவையில்லை. இது நிற்க, ஒருவனுடைய சரீர வாதையைப் போக்குகிறவர்கள்மட்டில் சர்வேசுரன் இரக்கங் காட்டுவாராகில், தங்களால் அற்ப நன்மையையும் செய்ய ஏலாமல் அகோர வேதனைப்படும் சேசுக்கிறீஸ்துநாதருடைய பத்தினிகளாகிற பரிசுத்த ஆத்துமங்களுக்கு உதவி புரியும் தரும ஆத்துமாக்களுக்கு சர்வேசுரன் ஏராளமான நன்மை உபகாரங்களைப் புரிவாரென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

மரண ஆபத்தில் அகப்பட்ட யாதொருவன் நமது உதவியால் அந்த ஆபத்தினின்று தப்பித்துக்கொண்டு, இராஜ அரண்மனையில் சிறந்த உத்தியோகத்தில் அமருவானகில், தன்னைப் பெரும் ஆபத்தினின்று காப்பாற்றிய உபகாரிகளாகிய நம்மை மறப்பானே? பரிச்சேதம் மறக்காமல் அரசனிடத்தில் சிபாரிசு செய்து தன் உபகாரிகளுக்கு அவசரமான நன்மை உபகாரங்களைப் பெற்றுக் கொடுப்பானன்றே? அவ்வாறே உத்தரிக்கிறஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்கள் அநேக வருஷங்களாக சர்வேசுரனுடைய கோண நீதியால் தண்டிக்கப்பட்டு, பொறுக்கமுடியாத வாதைப்பட்டு வருந்துகையில், நமது உதவியால் தாங்கள் அனுபவிக்கும் பொறுக்கக் கூடாத கொடிய வாதை சிறுகச்சிறுகத் தணிந்தபின், மோட்சத்தில் பிரவேசித்து, தேவ தரிசனங்கொண்டு, நித்தியானந்த பாக்கியத்தைச் சுகிப்பதற்கு உதவி செய்த தங்கள் உபகாரிகளை மறப்பார்களோ? பரிச்சேதம் மறக்கமாட்டார்கள். தாங்கள் உத்தரிக்கிறஸ்தலத்தில் பயங்கரத்துக்குரியவேதனைப் படுகையில் தங்களுக்கு உபகாரம் புரிந்த உபகாரிகளை நினைவுகூர்ந்து, அவர்களுக்கு உண்டாகும் விபத்து ஆபத்துக்களிலும், பாவச் சோதனைகளிலும் நின்று இரட்சிக்கும்படி சர்வேசுரனைப் பார்த்து மன்றுடுவார்களென்பது நிச்சயம்.

மேலும், உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக தங்கள் ஜெபதப முதலிய ஞான முயற்சிகளால் உதவி புரிகிற கிறீஸ்துவர்களை தயாசுரூபியான சர்வேசுரனும் மறக்கமாட்டார். ஒருசெம்பு ஜலம்குடிக்கக்கொடுத்தவனுக்கு மோட்சத்தில் சம்பாவனை அளிக்கப்படுமென்று திருவுளம்பற்றிய சர்வேசுரன், தங்களால் அற்ப நன்மையும்பெறச் சக்தியற்று, சகலவித வாதைப்படும் ஆத்துமாக்களுக்கு உதவி சகாயங்களைப் புரியும் நமக்கு, இம்மையிலும் மறுமையிலும் ஏராளமான நன்மைகளைக் கட்டளையிடுவாரென்று கூறத் தேவையில்லை. உத்தரிக்கிறஸ்தலத்திலுள்ள ஆத்துமங்களுக்கு உதவி புரிவோர் பாவச் சமயங்களை விலக்கவும், பாவச்சோதனைகளை ஜெயிக்கவும் உதவி புரிந்து, புண்ய வழியில் உத்தமராய் ஒழுக அவர்களுக்கு அனுக்கிரகம்புரிந்து, அவர்களுடைய நித்திய சம்பாவனையையும் சர்வேசுரன் அதிகரிப்பார் என்பதற்கு அணுவளவும் சந்தேகமில்லை.

ஆகையால், ஆத்துமாக்களுடைய மாதமாகிற இந்த மாதத்தில் அடிக்கடி திவ்ய பூசைகண்டு, அவ்வாத்துமாக்களுக்கு ஒப்புக்கொடுப்போமாக! ஜெபதபங்களைப் புரிந்து, திவ்யநன்மை உட்கொண்டு, சிலுவைப்பாதை சந்தித்து, தானதருமஞ்

செய்து, ஞான பலன்களைப் பெற்று, அவைகளை அந்தப் பரிசுத்த ஆத்துமங்களுக்கு ஒப்புக்கொடுக்க முயற்சிசெய்வோமாக. இவ்வாறு நாம் செய்வோமாகில், நாம் ஒரு நாள் இறந்து உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப் படும்போது, நம்மால் மீட்புபெற்ற ஆத்துமாக்கள் நம்முடைய மீட்புக்காக சர்வேசுரனை மன்றாடுவார்களென்று அறியக்கடவோம்!

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XVIII
மணவாளி.

"நிர்ணயத்துடன் உன்னை விவாகஞ்செய்துகொள்வேன்; உன்னை முடிவிலாக்காலமட்டும் மணம் முடிப்போம்" (ஒசெ. III. 20).

ஞானியாராகிய சலமோன் எழுதிய உந்நத சங்கீதாகமத்தின் முகவுரையில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது. "உன்னத சங்கீதமென்னுங் காவியத்தில், சலமோன் மணவாளனுகிய சேசுக்கிறீஸ்துவுக்கும், மணவாளியான திருச்சபைக்குமுள்ள அன்பையும், அன்னியோன்னிய ஒன்றிப்பையுந் தீர்க்கதரிசனத்துக்குரிய உவமையாகக் காட்டுகின்றார் என்பது உறுதி. இவ்வுவமையில் சேசுநாதருக்குந் திருச்சபைக்குமுள்ள நேசத்தைமாத்திரமல்ல, சர்வேஸ்வரனுக்கும் பத்தியுள்ள ஆத்துமாவுக்குமுள்ள பரஸ்பர அந்நியோந்நியமும், விசேஷமாய்த் தேவமாதாவின் வியக்கத்தக்கதான நிகரில்லா மேன்மையும், சாங்கோபாங்க மகிமையும் இந்த ஆகமத்திலே மகா சூட்சுமத்துடன் காட்டப்பட்டிருக்கின்றன."

வேதாகம விரித்துரையாசிரியர்களின் கொள்கையும் அதுவே. கொர்னேலியஸ் தெலாப்பிதே என்பவர் 'மணவாளி' என்ற வார்த்தை நான்கு விதப் பொருட்படும் என்கிறார். 1. கிறீஸ்துநாதரின் மானுஷியம்; 2. திருச்சபை; 3. பரிசுத்த கன்னிமரியாய்; 4. பத்தியுள்ள ஆத்துமம். மணவாளியென்பது மரியாயின்மட்டில் எங்ஙனம் பொருந்துமென்பதை விவரித்து அவர் சொல்லுகிறதாவது: தாரகைகளைவிட சந்திரன் அதிகமாய்ப் பிரகாசிப்பது போல், நீதிமான்களைவிட அதிகமாய் மரியாய் ஜ்வலிக்கின்றாள். இவளையுங் கிறீஸ்துநாதரையும்பற்றி உந்நத சங்கீதம் குறிப்பிடுகிறதை நன்கறியலாம். சேசுவின் மனுஷாவதாரமும் அதனிமித்தம் அவர் திருச்சபையை மணந்ததும் கன்னிமரியாயாலும் அவள் வழியாயுமே நடந்தன. வார்த்தையானது மாம்சமானது. சேசுதேவன் மரியாயிடத்திலிருந்து பிறந்தார். ஆகவே, கிறீஸ்துநாதர் மாம்சத்தை யெடுத்தபோது மரியாயை மணந்தாரென்கலாம். ரூப்பர்துவி, ஹோனேரியஸ் முதலிய சாஸ்திரிகள் முழு சங்கீதத்தையும் மரியாய்க்குப் பொருந்தும்படியாகவே வியாக்கியானித்துளர். ஆண்டுள்ள சில வசனங்களைத் திருச்சபையும் மரியாய்க்குப் பொருத்தமாக வைத்துப் பாடுகின்றது. அவைகளைச் சற்றே ஆராய்வோம்.

1. "என்னன்பே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதே கிடையா" (IV. 7). மரியாய் சௌந்திரியம்பொருந்தியவள். அதுவும் சிருஷ்டிக்கப்பட்ட மானிடர்களைவிட அதிகமாக மாத்திரமல்ல, சம்மனசுக்களையும்விட மேலான அழகுள்ளவள். அவளிடத்தில் யாதொரு மாசுங் கிடையாது. ஜென்மப்பாவமாயினுஞ்சரி, கர்மப்பாவமாயினுஞ்சரி, சாவானபாவமாயினுஞ்சரி, அற்பப்பாவமாயினுஞ்சரி பாவத்திற்குரிய வேதனைதானும் அவளுக்கில்லை. இதுவே திருச்சபை போதிக்குஞ் சத்தியம். "ஆண்டவரின் நிமித்தம் பாவமே அணுகப்பெறாத கன்னிமரியாயைத் தவிர மற்றெல்லா மனிதரும்—நீதிமான்களுங்கூட அற்பப்பாவத்திற்கு ஈடுபட்டுளர்" என்று பகர்கிறார் அர்ச். அகுஸ்தீன். அர்ச். இல்தெபோன்ஸ், ரூப்பர்துஸ் என்பவர்கள் அவ்வசனம் மரியாய் ஒருவளுக்கே உரியது என்று கூறுகிறார்கள்.

"சேயாக மனுக்குலத்திற் சேர்ந்துதித்த
வையகத்தோர் சிதவை நீக்கத்
தாயாக வளர்கன்னித்தாய் வயிற்றிற்
பழம்பழிசேர் தவறில்லாது
தூயாக மறிவாண்மை சுடர்காட்சி
வலியருள் மாண்டுணிவு சூட்சி

வீயாத வரங்கொடு பெற்றெவ்வுலகும்
வியப்பெய்த வேய்ந்தாளன்றோ !''

2. "ஓ! இஸ்ராயேலின் குமாரத்திகளே! நான் கறுப்பாயிருக்கிறேன். ஆனல் அழகுள்ளவள்.

ஆதாம் பாவத்திற்குள்ளானன். அவன் உண்ட விஷம் அவன் சந்ததி முற்றும் பாவினது. ஆனல் அந்த விஷம் மரியாயின்மீது சற்றேனும் படவேயில்லை. ஆயினும் மரியாய் ஆதாமின் குலத்தில் உதித்தவள். பாவியின் பிள்ளையானபடியால் வெளிப்பார்வைக்காகிலும் பாவப்படிறுபட்டுக் கறுத்தவள்போல் தோன்றினள். அவளோ பூரண அருளால் மெய்யான எழில் பொருந்தியிருந்தாள்.

தனது தாழ்ச்சியால் மற்ற ஸ்திரீகளைப் போல தென்பட விரும்பியதாலும் கறுத்திருந்தனளென்கலாம். மாசுபட்ட பெண்களைப்போல் தேவாலயத்திற்குத் தன்னைச் சுத்திகரம்பண்ணப் போயினும், அவளுள்ளம் அசுத்தமே யணுவளவுமின்றி தூய்மையாய்த் துலங்கிற்று. அவளது தாழ்ச்சியானது அவளைக் கடவுள்முன் சௌந்தரியமுள்ளவளாகவும் அவருக்குகந்தவளாகவுஞ் செய்தது.

சேசுநாதரின் பாடுகளினிமித்தம் அவள் கறுத்திருந்தனள் என்பதும் சரியாம். அவர் பட்ட வேதனைகள் அவளது இருதயத்தையுஞ் சுட்டுக் கருகச்செய்தன. நீதி சூரியன் மங்கவே, சந்திரனைப்போன்ற மரியாயும் மங்கிப் போனள்.

3. "உள்ளானந்தத்தை வருத்துவிக்கத் தக்க காதலியே! நீ எவ்வளவோ ரூபவதியும் இலட்சணமுள்ளவளுமாயிருக்கின்றாய்" (IV. 1). சிருஷ்டிக்கப்பட்ட சர்வ சராசரங்களில் மரியாயைப்போன்ற அழகும் வனப்பும்பொருந்திய தொன்றுமில்லை. ஓ! தேவதாயே! நீ அழகும் மதுரமும்பொருந்தியவள்" என்று திருச்சபை பாடுகின்றது. "உனது தாயுரிமையில் அழகாயும், கன்னிமையில் சௌந்திரியமாயும் இரண்டிலும் அற்புதமாயும் இருக்கின்றாயே!" என ஹேயில்கிரினுஸ் செப்புகிறார். தனது குமாரனும் சேசுவுக்கு அமுதூட்டி வளர்க்கும்போதும், அவரோடு சல்லாபித்தபோதும், அவரோடு வாசஞ்செய்தபோதும் எவ்வளவு ஆனந்தம் அநுபவித்தாளென்று யார் செப்புவார்?

4. இராசா தம் மஞ்சனத்தமர்ந்திருக்கையில் நான் பூசிக்கொண்டிருந்த பரிமளம் சுகந்த வாசனை வீசினது" (I. 11). தேவசுதன் பிதாவின் மடியிலிருக்கையிலேயே மரியாயினது தாழ்ச்சியின் சுகந்தத்தை முகர்ந்தார். அதனல் பீடிக்கப்பட்டு மோக்ஷத்தைவிட்டுக் கீழே யிறங்கினர். "தாழ்ச்சியே ஆத்துமத்திற்கு அமைதி. அதையுடைத்தானவரின் ஆத்துமம் அமரிக்கையாயிருக்கும்." "இராசா (சேசுநாதர்) எனது (மரியாயின்) சுகந்தத்தை முகர்ந்து எனதிருதயத்தின் தாழ்ச்சியிலேயே வீற்றிருக்கப் பிரியங் கொண்டார். ஆகவே, நித்திய சிம்மாசனம்விட்டிறங்கி என்னில்லத்தில் வந்தார். சகல சராசரங்களையும் ஆளுகிறவர். அவர்தம் அடிமையின் குமாரனுனர்" என்று ரூபர்துஸ் மரியார் சொல்லுவதுபோல் வரைகிறார். மகிமைப்பிரதாபமுள்ள இராசா மனுவவதாரம் எடுக்கையில் மரியாயினிடம் வந்தார். குழந்தையாயிருக்கையில் மரியாயின் கரங்களில் எத்தனையோ தடவை வீற்றிருந்தார். அச்சமயங்களில் எவ்வளவு ஆனந்தத்தோடு மரியாயின் தாழ்ச்சி, கற்பு முதலிய பல புண்ணியங்களின் சுகந்தத்தை சுகித்திருப்பார்."

5. "எனது ஆத்தும நேசத்தையுடையவரைத் தேடிப்பார்த்தேன்; தேடியும் அவரைக் காணவில்லை. (ஆதலால்) நான் எழுந்து நகரத்தைச் சுற்றிக்கொண்டு வீதிகளிலும் சதுர தெருக்களிலும் என் ஆத்துமம் நேசிக்கும் அன்புடையானைத் தேடிப்பார்ப்பேன்" (III. 1, 2). ஜெருசலேம் பட்டணத்தில் சேசுநாதர் காணமற்போனபோது மரியாய் இவ்வாறு பிரலாபித்தனள் என்று ரூப்பர்துஸும் மற்றுஞ் சிலரும் நினைக்கின்றனர். "என் ஆத்தும நேசரை நீங்கள் கண்டீர்களோ" என்று சொல்லிக்கொண்டு அலைந்து திரிந்த கஸ்தியுள்ள மாதாவின் துய ரம் அளவுக்கடங்காததாயிருந்திருக்குமேயென்று அர்ச். அல்போன்ஸ் குறிப்பிடுகிறார்.

"மரியாயின் உறவினருஞ் சிநேகிதருஞ் சொல்லிய ஆறுதலால் அவளுக்கென்ன பிரயோஜனம்? சேசுநாதர் காணமற்போனல் வேறெது அவளுக்குச் சந்தோஷத்தை யளிக்கும்?" என்று அர்ச். பொனவெந்தூர் வினவுகிறார். அவள் தேடியுந் தன் மகனைக் காணததால் கடவுளைப் பார்த்து "என் பிதாவே! என்னரிய கட

வுளே! உமது நேச குமாரனை எனக்களித்தீர். நானோ பரிதாபம் அவரை யிழந்துவிட்டேன். எங்கிருக்கிறார் என்று நானறியேன். அவரைத் திரும்பவும் என்னிடம் அனுப்பும். என் துயரத்தைப் பார்த்து என்மீது இரங்கும். நேச சேசுவே! உமது தாயண்டை வந்துசேரும். எனதன்பான மகனே! நீரே என் ஆனந்தம்—என் நம்பிக்கை—உம்மையன்றி நான் சீவிப்பது எங்ஙனம்? தாமதியாதேயும். திரும்பிவந்தருளும்" என்று மரியாய் தன் கஸ்திநேரத்தில் புலம்பி மன்றாடியிருப்பாள். கடவுளும் அவளுக்கிரங்க, சேசுவைக்கண்டு பரமானந்தமானாள்.

6. "நேசமாகிய அக்கினியானது திரளான தண்ணீர்களாலும் அவிந்துபோகாது; வேகமான வெள்ளங்களாலும் தணிக்கப்படாது" (VIII. 7). இங்கு கூறப்பட்ட தண்ணீர்ப்பிரவாகமானது மரியாயின் கஸ்தி துன்பங்களுக்கு உவமானம். அவள் அநுபவித்த துயர வேதனைகளுக்குங் கங்குகரையுண்டோ? வேதசாட்சிகளின் இராக்கினி யவள். அவர்கள் சகலரும் பட்ட பாடுகளையெல்லாம் ஒருங்கே யநுபவித்தாள் அவள். அவளது திருக்குமாரனும் அவளோடு துன்பமடைந்தார். அவளோடு சிலுவையிலு மரித்தாரென்கலாம். அவர் பட்ட பாடுகளின் ஞாபகம் அவளது பின்சீவியத்தைப் புண்படுத்தினது. சேசுநாதரின் சிஷ்யர்கள் மற்றுஞ் சகல விசுவாசிகள் பட்ட துன்பங்களும் அவள் இருதயத்தை வாட்டின. ஏனெனில், அவர்களின் தாயுமல்லவோ? ஆயினும் இப்பேர்க்கொத்த துன்பதுயரமெல்லாம் அவளது நேசப் பெருக்கை அவித்துப்போடவில்லையே. அதற்கு மாறாக அவள் சீவியகாலமுற்றும் அந்நேசம் போஷிக்கப்பட்டு அதிகரித்தது.

இவ்வுலகிலிருக்கும்வரையில் நாமுந் துன்பப்பட நேரிடும். கஸ்திகளனுபவிப்பது சகஜமாகும். துன்பதுரிதங்கள் நம்மிடத்திலிருக்க வேண்டிய தேவ சிநேகப்பற்றை அவித்துப்போடக்கூடாது. "கிறீஸ்துவின் சிநேகத்தினின்று நம்மைப் பிரிப்பது யார்? உபத்திரியமா, கஸ்தியா, பசியா, நிர்வாணமா, ஆபத்தா, கலகமா, வாளா? நம்மை நேசித்தவரைக்கொண்டு இவைகளிலெல்லாம் வெற்றியாளாகவே இருக்கின்றோம்" என்று அர்ச். சின்னப்பரோடு துணிந்து சொல்வோமாக.

இவ்வகை நல்லுணர்ச்சியோடு சீவித்துவருவோமேயாகில், மரியாயைப்போல் நமதாத்துமம் ஆண்டவரின் மணவாளியாகும். நமது பரலோக பத்தாவுக்குப் பிரமாணிக்கமுள்ளவரா யிகத்திலிருந்தால், ஐயமற பரத்தில் நித்திய மணக்கொண்டாட்டங் கொண்டாடுவோம்.

(இன்னும் வரும்)

M. S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved)

8-ம் அதிகாரம்.

அதுஸ்தீன் உரோமாபுரிக்குப்போய் அங்கு வியாதிப்படுவது—மோனிக்கம்மாள் அவருக்காகச் சிந்திய கண்ணீர்களின் பலன்—இதுவரையில் நேர்ந்த கண்டங்களைவிட பயங்கரத்துக்குரியதான ஒரு புதிய கண்டம்—சர்வழம் சந்தேகமே—தன் மகனுக்குத் தஞ்சமாக மோனிக்கம்மாள் தீவிரித்துப்போவது.

(முன் தொடர்ச்சி.)

பிள்ளையை யிழந்த தாயார் ஒருபோதும் ஆறுதலடைவதே கிடையாதென்றும், அவள் இருதயத்தில் துக்கம் எப்போதும் குடிகொண்டிருக்குமென்றும், எவ்வளவு நாள் சென்றுபோனாலும் அத் துக்கத்தை மாற்றவே முடியாதென்றும் சொல்வார்கள். அப்படியானால், தனது புத்திரன் பாவக்கறையுடன் அற்ப பச்சாத்தாபமுமின்றி மரணிப்பதைப் பார்ப்பது ஒரு விசுவாசமுள்ள கிறீஸ்துவ தாயாருக்கு எப்படியாயிருக்குமென்று நாமே யூகித்துக்கொள்ளலாம்! தேவநற்கருணைப் பெட்டியையாவது, பாடுபட்ட சுரூபத்தையாவது பார்த்தவுடன், அவளது உருக்கமுள்ள இருதயம் ஆழ்ந்த பரவச தியானத்தில் அமிழ்ந்திப்போகும். அப்படிப்பட்ட பரிசுத்த ஸ்திரீயானவள், தனது ஆத்துமத்தில் சரிபாதியாகிய தனது நேச புத்திரன், நித்திய நரகத்திற்குச் சபிக்கப்படுவதைக்

காணுமிடத்து அவளது துயரம் எப்படிப்பட்ட தாயிருக்கும்! அவளது சிந்தாகுலம் எம்மேரை யானதாயிருக்கும்!

அர்ச். அகுஸ்தீன் சொல்வது "இல்லை இல்லை, அப்படிப்பட்ட இருதய காயத்திலிருந்து என் தாயார் ஒருபோதும் சொஸ்தப்பட்டே இருக்கமாட்டாள்." அவர் மீளவும் சொல்வது "அப்படி நான் நிர்ப்பாக்கியனாய் மரித்திருப்பே னேயானால், ஓய்வு வொழிச்சலின்றி உருக்கப் பெருக்கத்துடன் அவள் புரிந்துவந்த ஜெபத்தின் பயனெங்கே? என் கடவுளே, கற்பும் அமைந்த புத்தியுமுள்ள அந்த விதவை அடிக்கடி தான தருமஞ்செய்து, எப்போதும் அர்ச்சியசிஷ்டவர் களுடைய சலிகையை நாடி, ஒரு நாளாவது திவ்யபூசை காணத் தவறாமல், தாழ்ச்சியும் மனஸ்தாபமுமுள்ள இருதயத்துடன் உம்மைப் பார்த்து மன்றாடிய மன்றாட்டை நீர் இகழ்ந்து தள்ளுவீரோ? பொன்னையல்ல, வெள்ளியை யல்ல, மங்கிப்போகும் புகழையல்ல, அழிந்து போகும் பொருளையல்ல, ஆனால் தனது குமார னின் ஆத்தும இரட்சண்யத்தை நாடி, அவள் அழுகையோடு புரிந்த மன்றாட்டை நீர் நிராகரித் துத் தள்ளுவீரோ? இல்லை ஆண்டவரே, கண் டிப்பாய் அப்படி தள்ளவேமாட்டீர். ஆதலால் தான் என்றும் மாறாத உமது நேச ஏற்பாட் டின்படி, அவளது கோரிக்கைக்கிணங்கி அவள் மன்றாடினதை இல்லையென்னாமல் அருள்புரிந் தீர்."

நான் முன்சொன்னதுபோல், அகுஸ்தீன் சுரத்திலிருந்து சொஸ்தமடைந்து, மறுபடியும் வாத்தித்தொழிலில் அமர்ந்து, உரோமையர்களு டைய இலக்கியங்களையும் மதாசாரங்களையும் படித்தறியவும், அவர்களது பூர்வீக பெருமைப் பிரதாபங்களை விளக்கிக்காட்டும் சாசனங்களையும் கட்டிடங்களையும் ஆராய்ந்துபார்க்கவும் தொடங் கினார். இதனால் அவருக்கு வேத விசுவாசமா வது, மனப்பாக்கியமாவது, உண்டானதே கிடை யாது. ஏனெனில் "சகலமும் சந்தேகம்" என் னும் கோட்பாட்டையே உறுதியாகப் பிடித்துக் கொண்டு, இனி மதபோதனைகளுக்கடுத்த எவ் வித விசாரங்களிலும் கலக்கக்கூடாதென்று ஒரே கண்டிப்பாய்த் தீர்மானம் செய்துகொண்டாரா கையால், அவரது ஆத்துமம் முன்னையவிட அதி கமான துக்கசாகரத்தில் அமிழ்ந்திப்போயிற்று.

அவரது சஞ்சலம் இது ஒன்றேயன்று. அவர் உரோமாபுரியில் ஒரு தருமப்பள்ளிக்கூடம் திறந்தார். அவர் வெகு சாமர்த்தியமுள்ளவரா யிருந்தபோதிலும், அவரிடம் படிக்கவந்தவர்க ளெல்லாம் படிப்பின்மட்டில் கொஞ்சமாவது விருப்பமில்லாதவர்களாயும் நல்லொழுக்கமற்ற வர்களாயுமிருந்தபடியால், இப்படிப்பட்ட அசட ருக்குத்தானா நான் வாத்தியாராயிருப்பது என்று தன் நிலைமையின்மட்டில் அரோசிகங்கொண்டு, கடைசியாய் அந்தப் பள்ளிக்கூடத்தையே சாத்தி விட்டார்.

கடவுள்மட்டில் அவருக்கிருந்த விசுவாசம் முற்றிலும் ஒழிந்தது. இப்போது மனிதர்கள் மட்டிலும் சமுசயங்கொள்ளத் தொடங்கினார். இதெல்லாம் விசேஷமாய் அகுஸ்தீனுடைய இரு தயத்திற்கு எப்படிப்பட்டவாதை என்னலாகும்?

இப்படி யவர் முற்றிலும் மனோவிசாரங் கொண்டிருக்குங்காலையில், மிலான் தேசத்து கல்லூரியில், வாக்கலங்கார சாஸ்திரி உத்தி யோகமொன்று காலியாயிருப்பதாகக் கேள்வி யுற்றார். இது ஒரு நல்ல உத்தியோகமே. ஏனெனில் "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்கிறபடி, நகராதிகாரிகளே சாஸ் திரியாரை நியமித்து, அவர்களே அவருக்குச் சம் பளம் கட்டிவந்தபடியால், சாஸ்திரியார் தன் ஜீவனத்திற்கு ஒரு நிலைபுத்தி யில்லாத அற்ப மாணாக்கர்களை நம்ப அவசரமிருந்ததில்லை. இது வுமன்றி அவ்வுத்தியோகம் வெகு கௌரவமுள் ளதென்பதாகவும் மதிக்கப்பட்டுவந்தது. சம்ப ளமும் அதிகம். சிக்கனமாய்ச் செலவுசெய்து, மாசந்தோறுங் கொஞ்சம் சேர்த்துவைத்தால், நாளாவட்டத்தில் பெருந்தொகையாகி வயோதிப காலத்தில் சாஸ்திரியார்! தன் வயிற்றை வளர்க்க அங்கும் இங்கும் வேலை செய்யவேண்டிய நிர்ப் பந்தம் இல்லாமல், சுயாதீனமாய் ஜீவனம் செய் யக்கூடுமாயிருக்கும்.

இதுவுமன்றி, மிலான் பட்டணத்தில் வாக் கலங்கார சாஸ்திரி வேலை வகிப்பதும் ஒரு விசே ஷந்தான். ஏனெனில் உரோமைச் சக்கரவர்த்தி கள் அந்நகரையே தங்கள் வாசஸ்தலமாக ஏற்ப டுத்திக்கொண்டபடியால், உலகத்திற்கே அதனை ஒரு நவீன தலைநகரமாக நியமித்தார்கள்.

ஆகவே அகுஸ்தீன் அதிகாரிகளுக்கு ஒரு விண்ணப்பம் எழுதியனுப்பி, உரோமை அதிகா

ரியாகிய கீர்த்திபெற்ற சிம்மாக்குஸ் என்பவரின் முன் நடத்தப்பட்ட பிரசித்த பரீட்சையில் தேர்ச்சியடைந்து அப்பதவியை அடைந்தார். தனக்குவந்த கௌரவமுள்ள உத்தியோகத்தை யெண்ணி கொஞ்சம் மனமகிழ்ந்து, இனி அவ் வுத்தியோகத்தில் என்ன சம்பவிக்கப்போகி றதோ வென்பதைப்பற்றி கவலைகொள்ளாமல் அதி தீவிரத்துடன் மிலான் நகருக்குப் புறப்பட் டார். ஆயினும் "சர்வமும் சந்தேகமே" என் னும் கோட்பாட்டையே இன்னும் அவர் சாதித் துவந்தபடியால், தத்துவசாஸ்திரங்களை இனி வாசிக்கவே கூடாதென்று ஒரே தீர்மானம் செய்துகொண்டு, வாக்கலங்கார சாஸ்திரத்தைப் படிப்பதிலேயே தன் நேரத்தைச் செலவழித்து அதிலேயே தன் கவனத்தையும் புத்தி சாமர்த்தி யத்தையும் செலுத்திவந்தார்.

இதனிடையில் அர்ச். மோனிக்கம்மாள் சும்மாயிருக்கவில்லை. அவரது மன நிலைமையை அவர் எழுதின கடிதங்கள்மூலமாக அறிந்து கொண்டோ, அல்லது தன் தாய்க்குரிய பட்ச பாசத்தினால் தூண்டப்பட்டோ, அவ்ரிடம் போகத் தீர்மானித்தாள். போகவேண்டுமானால், வெகு நாட்கள்வரைக்கும் கடினமான பிரயா ணம் செய்யவேண்டியிருக்கும். தான் தரித்திர முள்ளவளாயிருந்தபடியால் பயணத்திற்கு வேண் டிய செலவுக்குத் தன்னிடமிருந்ததையெல்லாம் விற்கவேண்டியிருந்தது. மேலும் தன் வீட்டை யும், அநேக வருஷங்களாகத்தான் அநுசரித்து வந்த வழக்க பழக்கங்களையும் விட்டுவிட்டு மத் திய சமுத்திரத்தைக் கடந்துபோகவேண்டியி ருந்தது.

ஆனால் ஒரு தாய், விசேஷமாய் அந்த அர்ச் சியசிஷ்ட தாய் எந்தக் கஷ்டத்திற்கும் எந்த சுயப்பரித்தியாகத்திற்குத்தான் பின்வாங்கப்போ கிறாள்?

தனது குமாரன் ஒரு வருஷத்திற்குமுன் தன்னைக் கைநெகிழ்ந்துவிட்டுப்போன அதே துறைமுகத்தில், க. அ. 385-ம் வருஷத்தில் மோனிக்கம்மாள் கப்பலேறினாள். அப்போது தான் ஒரு இராமுழுதுந் தங்கி ஜெபஞ்செய்து கொண்டிருந்த அர்ச். சிப்ரியான் கோவிலில், நேரமிருந்திருந்தால் இப்போதும் போய் ஜெபம் செய்து, தன் குமாரனைக் கண்ணாரத் திரும்பக் காணும் பாக்கியத்தையும், அவர் மனந்திரும்பி சத்திய வேதத்தில் சேர்வதற்குத்தான் உதவியா யிருக்கும்படியான அபரிமிதப் பாக்கியத்தையும் அளிக்கும்படியாக, கர்த்தரைப் பார்த்து மன் றாடியிருப்பாள்.

இவ்விரண்டு வகையான பாக்கியங்களும் அவளுக்குக் கிடைக்காதுபோல் துவக்கத்தில் தோன்றிற்று. அவள் பிரயாணஞ்செய்த கப்ப லானது, ஆப்பிரிக்கா கரையைத் தாண்டிப்போ னதுதான் தாமதம், பயங்கரத்துக்குரிய புச லுண்டாயிற்று. கடல் தன் அடி பாதாளம்மட் டும் கொந்தளிப்புக்கொள்ள, அதன் பெருத்த அலைகள் புரண்டு கப்பலை நாலா பக்கமும் தாக்கி மோதுவதைக் கண்டு, கடலோடிகள்முதலாய் திடுக்கிட்டுப்போனார்கள்.

மோனிக்கம்மாள் மனவமைதியுடன் இருந் தாள். என்ன! தன் குமாரனைத் திரும்ப காணு மலே தான் கப்பலோடு நாசமாவதுதானோ? தன் மகனை மனந்திருப்பக் கர்த்தர் தடைசெய் வாரோ? இல்லை, இல்லை. அப்படி ஒருபோதும் ஆகவே ஆகாதென்று தன் மாதாவுக்குரிய தூய இருதயத்தில் மறுக்கக்கூடாத நம்பிக்கை பிறந் தது. ஆதலால் கப்பலின் மேற்புறத்தில் அவள் தைரியத்தோடு நின்று, புசல் நின்றுவிடுமென் றும் யாதொரு அபாயமுமின்றி கப்பல் துறை முகத்தைக் கிட்டாலாகுமென்றும், கடலோடிக ளுக்கு நம்பிக்கையுண்டாக்கும் விதமாகச் சொன் னாள். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற மூதுரைப்படி, கொஞ்சத்துக்குள் அவள் வார்த்தை உண்மையாயிற்று. காற்றும் ஓய்ந்தது. மேகமும் ஒழிந்தது. இத்தாலியா சீமையின் காந்தியுள்ள கரையும் கண்ணுக்குப் புலப்பட்டது.

மோனிக்கம்மாள் அதிக அவசரத்துடன் உரோமாபுரிக்குப்போய், தன் மகனை அரவ ணைத்து முத்தமிட்டு, அவரது ஆத்தும நிலை மையை அறியும்படியாகத் தீவிரித்தாள். ஆனால் அவள் உரோமாபுரிக்குப்போனபின், அகுஸ்தீன் அங்கில்லாமல் மிலான் பட்டணத்திற்குப் போய் விட்டாரென்றறிந்தபோது, அவள் மனது எவ் வளவு விசனப்பட்டிருக்குமென்று யோசித்துப் பாருங்கள்.

அகுஸ்தீன் தான் மிலானுக்குப் போவதை அறிவித்து எழுதிய கடிதம் மோனிக்கம்மாளுக்கு வழியில் தப்பிப்போயிருக்கும். ஏனெனில்

அகுஸ்தீனைப்போல் தன் தாயார்மட்டில் அவ்வளவு விநய பக்தியுள்ள குமாரன், இந்த விஷயத்தை அவளுக்குத் தெரிவித்திருக்கமாட்டாரென்று நம்புவது கூடாமை. இதற்குமாருக, தான் பள்ளிக்கூடத்தைச் சாத்திவிட்டு, ரோமாபுரியைவிட்டு மிலானுக்குப் போவதாக எழுதிய கடிதத்தைக் கண்டே, இவள் திடும்பிரவேசமாய் இந்தப் பயணத்தைத் துவக்கியிருந்தாலுமிருப்பாள். ஆனல், அகுஸ்தீன் தீவிரமாய் மிலானுக்குப் புறப்பட்டுப்போனர். இதைத் தான் அவளுக்குத் தெரிவித்தபோது, தன்னைக்காண அவள் வருவாளென்ருவது, அல்லது அப்படி வரப் புறப்பட்டு வழியிலிருக்கிருளென்ருவது அவர் சொர்ப்பனத்தில்முதலாய் நினைத்தவரன்று.

தான் எதிர்பார்க்காத இப்படிப்பட்ட துர்ச்சம்பவத்தைக்கண்டு மோனிக்கம்மாள் துக்கித்தாலும், "எண்ணித்துணிக கருமந் துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு" என்பதற்கிசைய, தான் தொடுத்த கருமத்தை முடிக்க ஒரு நிமிஷமேனும் பின்னிடைந்தவளேயன்று. உரோமாபுரியிலிருந்து மிலான் நகர் 600 மைல் தூரம். அங்கு போகவேண்டுமானல், அப்பென்னைன்ஸ் என்னும் பர்வதத்தைக் கடக்கவேண்டியிருந்தது. இப்போதவள் கொந்தளிப்புள்ள சமுத்திரத்தைக் கடந்துவந்திருந்தபோதிலும், சற்றேனும் தைரியம் குன்ருமல், துவக்கத்தில் கொண்டிருந்த உற்சாகத்துடனேயே, இந்தப் பயணத்திற்கும் துணிந்தாள். தன் குமாரனை இன்னெருமுறை பார்த்து, அவரை மனந்திருப்பவேண்டுமென்பதே அவளது பேரவா. கொஞ்சத்திற்கெல்லாம் தத்தளியாத இப்படிப்பட்ட விசுவாசம், எல்லாத்தையும்பார்க்கக் கடவுளை நேசிக்கும் ஒவ்வொரு தாய்மாரிடமுமிருக்கும். உண்மையில் கர்த்தரே மோனிக்கம்மாளுடைய இருதயத்தில் அப்படிப்பட்ட விசுவாசத்தை அதிகரிப்பித்தார். பயணத்தில் தனக்கு நேர்ந்த எவ்வித விபத்திற்கும் அவள் பின்னிடைந்தவளேயன்று. ஏனெனில், தான் அகத்தியம்போய் அகுஸ்தீனைப் பார்க்கவேண்டியிருந்தது. அகுஸ்தீனுக்கிருந்தது ஒரு கண்டம். விசுவாசம் இருதயத்தில் ஜனிக்குமுன் யாவருக்கும் அப்படிப்பட்ட கண்டமுண்டாகுவதுதான். அவர், தான் இதுவரைக்கும் அநுபவித்திராத பயங்கரத்துக்குரிய மனேவாதனையை அநுபவித்து, விசுவாசம் என்னும் பாக்கியத்தை அடையவேண்டியிருந்தது. ஆதலால் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மோனிக்கம்மாள் அருகிலிருந்து, அவருக்குத் தக்க கடைசி உதவி புரிந்து தாபரிப்பதே தகுதி. இப்படி அவரை விசுவாசமார்க்கத்தில் செலுத்தியபிறகுதான், அவள் இதுவரைக்கும்பட்ட துக்கப்பெருக்கத்திற்கும், அழுகைப்பிரலாபத்திற்கும், கர்த்தர் சம்பாவனை அளிக்கக் கருத்துகொண்டிருந்தார்.

குருடன் தன் கையால் தரையைத் தடவித் தடவி சரியான வழியில் வந்துசேர்வதுபோல், அகுஸ்தீன் கடவுள் தனக்களித்த அறிவைக் கொண்டு, அந்தகாரத்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய்ச் சரியான வெளிச்சத்திற்கு வரும் இச்சமயத்தில், கடவுள் அவளை மிலான் நகருக்குக் கொண்டுவருகிருர். அவரது சிந்தாகுலம் எத்தகையானதென்று அவளுக்குத் தெரியும். ஆதலால் அவர் அச்சிந்தாகுலத்திலிருந்து விடுபட்டு ஜெகஜோதியாய் ஞான உத்தானமடைய அவள் சகாயஞ் செய்யவேண்டுமென்பது ஞாயமே.

CASSILDA OR THE MOORISH PRINCESS.

காஸில்டா

அல்லது

மூரிய இராஜகுமாரி.

அதிகாரம்—3.

டோலிடோவுக்குப் பிரயாணம்.

(முன் தொடர்ச்சி.)

உடனே சம்மதித்தால் எங்கே சந்தேக முண்டாகுமோவென்றஞ்சினவனுய், தன் எண்ணங்களை மறைக்கும்பொருட்டு, யௌவன வீரன் யோசனைசெய்துதான் விடையளிக்கக்கூடும் என்று வீரர் தலைவனிடம் சொன்னன். அவனும் அதற்குச் சம்மதிக்கவே, செபஸ்தியான் சற்று அப்பாற் சென்று யோசனைசெய்பவன்போல் பாவனை செய்து, திரும்பிவந்து தான் பட்டாளத்திற் சேர்ந்துகொள்வதாக மொழிந்தான். அதைக் கேட்ட

வீரர் தலைவன் மிக்கச் சந்தோஷமடைந்து அவனை அழைத்துக்கொண்டுபோய் மற்ற வீரர்களிடம் விட்டு, அவர்களிடம் பரிசயஞ்செய்து வைத்தான். அந்த வீரர்களும் தமக்குப் புதிதாய்க் கிடைத்த இளந்தோழனை வரவேற்று அவன் வனப்பிலும் முகவசீகரத்திலும் ஈடுபட்டவர்களாய் அவனிடம் வெகு அன்பாகவே நடந்துகொண்டார்கள். இவ்வாறு ஈமதிளவல் ஆல்டீமனுடைய மெய்க்காப்பாளரில் ஒருவனாய் அன்று மாலை டொலிடோ நகரிற் பிரவேசித்தான்.

அந்நகரானது தேகஸ் என்னும் நதியால் மூன்று பக்கங்களிலும் சூழப்பெற்று, அதன் வலது கரையில் கட்டப்பட்டு விளங்கிற்று. செபஸ்தியான் அப்பட்டணத்தின் பருமனையும், அங்கேயுள்ள பிரமாண்டமான விநோத கட்டிடங்களையும், சிங்காரத்தோட்டங்களையும், விசாலமான வீதிகளையுங்கண்டு ஆச்சரியத்தால் பிரமித்துவிட்டான். அவன் இதற்குமுன் கீழ்நாடுகளிலும் மேனாடுகளிலுமுள்ள அநேக பெரிய பட்டணங்களைத் தரிசித்தவனாயிருந்தும், அந்நகரைக் கண்டு அவன் அவ்வளவு ஆச்சரியங்கொண்டதொன்றே அந்நகரின் மகத்துவத்தைத் தெற்றெனக் காட்டிற்றென்னலாம்.

அக்காலத்தில் டொலிடோ நகரின் ஜனத்தொகை இரண்டு லட்சமாம். நகரைச்சுற்றி உயர்ந்த மதில்கள் எழுப்பப்பட்டிருந்தன; அதனைப் பகைவரினின்றுங் காக்கும் படைவீரனைப்போல் தேகஸ் நதியின் இடதுகரையிலிருந்த ஒரு குன்றின்மேல் ஒரு பலத்த கோட்டை விளங்கிற்று. இடமகன்ற வீதிகள் சிலவற்றில் அரண்மனைகள், பள்ளிவாசல்கள், சலவைக்கல் மண்டபங்கள், சிங்காரச்சோலைகள், குளிக்கு மண்டபங்கள் முதலியவை நிறைந்திருந்தன. ஸ்கலவோனிய வீரருக்கென்றே ஏற்படுத்தியிருந்த விடுதியோ, ஒரு அரசமாளிகைபோலிருந்தது.

ஆனால் ஆல்டீமனுடைய அரண்மனையை என்னென்போம்! சுகபோகத்துக்கும் வைபவத்துக்கும் உரித்தானவை இவ்வுலகில் என்னென்ன அவசியமென்று மனக்கற்பனை செய்யக்கூடுமோ, அவையனைத்தும் ஒருங்கே திரண்டு உருவெடுத்துவந்தாற்போல் விளங்கிற்று அம்மகத்தான மாளிகை. அதை ஒரு கட்டிடமென்பதற்குப் பதிலாய் ஒரு நகரமென்று சொல்வது நியாயமாயிருக்கும். ஏனெனில், நகரின் மத்தியிலிருந்து தேகஸ் நதிக்கரைவரையில் பல சிறந்த மாளிகைகளும் அவற்றைச்சுற்றியும் இடையிலும் கண் கவரும் வனப்புவாய்ந்த பூஞ்சோலைகளும் அடுக்கடுக்காய்த் தோன்றின. அக்கட்டிடங்களில் சிறந்தது ஆல்டீமன் வசிக்கும் மாளிகை; இத்தாலியாவினின்றுங் கொண்டுவரப்பட்ட ஆயிரம் வெண் சலவை கற்றூண்களின்மேல் அது கட்டப்பெற்றிருந்தது. அதன் உட்பாகமோ, சுகபோகங்களுக்கும், மாட்சிமை வைபவத்துக்குமடுத்த பொருள்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கு நோக்கினும் பொன்னாலும் வெள்ளியாலும் வேலைப்பாட்டுடன் செய்யப்பட்ட சாமான்கள் நிறைந்திருந்தன. தரையோ சித்திரவேலை செய்யப்பட்ட பலவர்ண சலவைக்கற்களால் அமைக்கப்பெற்று, விலையுயர்ந்த இரத்தினக் கம்பளங்கள் விரிக்கப்பெற்றிருந்தது. சீடர் மரத்தால் விநோதமாய் ஏற்றப்பட்ட பெரிய உத்திரங்களும், சித்திரத் தூண்களும் கண்ணைக் கவர்ந்தன. கொலுமண்டபத்தில் சுவர்களும் தரையும் விலையுயர்ந்த சலவைகற்களால் வெகு சிங்காரத்துடன் கட்டப்பெற்று, மேற்கூரை பொன்னும் முத்துங் கலந்து மிக்க அலங்காரமாய் சித்திரிக்கப்பட்டு, பிரகாசித்தன. ஆனால், இவையனைத்தினும் சிறந்தது, அம்மண்டபத்தின் மத்தியில் பொன்மயமாய் விளங்கும் சிங்கங்கள், யானைகள், பருந்துகள், புறாக்கள், மயில்கள் முதலியவற்றால் சூழப்பட்டு எப்போதும் குளிர்ந்த நீரை குபுகுபுவென மேலெழச்செய்து சுற்றிலுமுள்ள மலர்களின்மீது இறைக்கும் செயற்கை நீரூற்றும். மேலும் இந்த ஜெந்துக்களின் வாயினின்றும் சுகந்த நீர் கிளம்பிப் பெருகிக்கொண்டே இருப்பதைக் கண்டோர் அப்படியே பிரமித்து நிற்பார்கள் என்பது மிகையாகாது. அதன் பக்கத்திலிருந்த நீர் தொட்டியில் பொன்னால் செய்யப்பட்ட சிங்கார அன்னமொன்று நீந்துவதுபோல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இந்த ஆச்சரியத்துக்குரிய செயற்கைப் பறவையை சூட்சுமமாய் நிர்மாணித்தவன் கான்ஸ்டாண்டிநோப்பில் நகரினின்றும் போந்த ஒரு பேர்போன சிற்பசாஸ்திரி. அந்த நீரூற்றுக்குமேல், ஒரு கிரீக் சக்ரவர்த்தியால் வெகுமானமாய் அளிக்கப்பட்டதும், மிக்க விலையுயர்ந்ததுமான ஒரு பெரிய முத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. மிக்க விநோதமாய்ப் பூவேலை செய்யப்பட்ட பட்டுப்பீதாம்பரங்கள் சுவர்களில் ஆங்

காங்கு தொங்கவிடப்பட்டு, அம்மண்டபத்தை அலங்காரஞ்செய்தன.

செபஸ்தியான் பிரபு இந்தச் சிறந்த விநோதங்களைக்கண்டு ஆச்சரியங்கொண்டனனேனும், இதற்கு மாருய் கார்சியாஸ் பிரபுவை அடைத்துள்ள சிறைக்கூடத்தின் அந்தகாரத்தையும் அலங்காரமின்மையையும்பற்றிச் அச்சமயம் சிந்திக்காமலிருக்கமுடியவில்லை.

கிறீஸ்துவர்களையும் உரேக்காள் பெருமாட்டியின் காதலரையும் அடைத்துவைத்திருந்த சிறைச்சாலை ஆல்டீமன் அரண்மனைக்கு அருகாமையில் அமைக்கப்பட்டிருந்தது. இவற்றில் ஒன்றிலிருந்து மற்ருென்றுக்கு இரகசியமாய்ப்போக ஒரு சுரங்கவழியுண்டு. அவ்வழியாய் ஆல்டீமன் தனக்கிஷ்டமானபோது சிறைச்சாலைக்குப் போய், கைதிகளைக் காண்பதிலும், அவர்களைச் சித்திரவதைச் செய்வதிலும், அவர்களையும் அவர்கள் தேவனையும் பழித்து நிந்திப்பதிலும் மிக்க திருப்தியடைந்தவனுய்க் காலங்கழிப்பது வழக்கம்.

காவற் கூடம், வெளியில் பார்ப்பதற்கு மற்றக் கட்டிடங்களைப்போல் வெகு விநோதமாய்க் கட்டப்பட்டிருந்தபோதிலும், உள்பாக முழுதும் இருள் நிறைந்த பெரிய குகைபோல் தோன்றினது. கைதிகளின் மனதை எந்த எந்த வகையில் துன்பப்படுத்திப் பயமுறுத்தலாமோ, அவ்வுபாயங்களையெல்லாம் ஒன்றும் மறவாமல் அங்கே ஏற்பாடு செய்திருந்தது; இதனுல்தான் தங்கள் காவல் முறை வரும்போது சிறைக்காவலர் அவ்விடம்போகத் தயங்குவது வழக்கம். செபஸ்தியான் பிரபுவோ தன் முறை எப்போ வருமென்று, மற்ற காவலரைப்போல் தயங்காமல், மிக்கச் சந்தோஷத்தோடு எதிர் பார்த்தான்; ஏனெனில் தன் நண்பரைக் காணும் சந்தர்ப்பம் அதுவேயன்ருே! ஒருக்கால் தன் நண்பரைக் காணமுடியாவிடினும், அவர் குரலோசையையேனும் கேட்கக்கூடும் என்று நினைத்தான்; அதிர்ஷ்டவசத்தால் ஒருக்கால் நேரிலேயே பார்க்கும்படி நேரிட்டாலும் நேரக்கூடும்; அப்படி நேர்வதால் அவனுக்கு உண்டாகும் ஆனந்தத்திற்குமோர் அளவுண்டோ? இதுகாறும் ஆறு தடவைகளில் சிறையில் காவல்புரிந்திருந்தும், தன் பிரிய நண்பர் இருக்குமிடத்தைமுதலாய்த் தெரிந்துகொள்ள அவனுல் முடியவில்லை! காணமுடியுமோ, முடியாதோவென்னும் சந்தேகத்தால் தன் நம்பிக்கையாவும் இழக்குந்தருணத்திலிருந்தான் நமதிளவல். தேவமாதா மோட்சத்துக்காரோகணமான திருநாளுக்கு முந்தின மாலை அவன் காவல்காக்கு முறையானபடியால், தன்னையுந் தன் நண்பரையும் எப்படியாவது காப்பாற்றவேண்டுமென்று மோட்ச இராக்கினியைப் பார்த்து மன்ருடியபின் காவற்கூடம் சென்ருன்; தன்னிடத்தில் நின்றவண்ணம் நாலா பக்கத்திலும் சுற்றிப் பார்த்துக்கொண்டே நடுச்சாமம்வரையில் காவல்புரிந்துகொண்டிருந்தான். இன்னும் ஒரு மணிநேரங் கழிந்தால் தன் காவல் முடிந்துவிடும்; வேருெரு வீரன் வந்து அவனைத் தன்னிடத்துக்கு அனுப்பிவிடுவான் என்று செபஸ்தியானுக்குத் தெரியும். அப்போது தன் நண்பரைப்பற்றி ஒன்றுந் தெரிந்துகொள்ளாமலே தன்னிருப்பிடம் போகவேண்டியிருக்குமேயென்று நினைக்க, அவன் மனதிலுண்டான துக்கம் அநந்தம். சிறைச்சாலையின் சுவர்களையும் கதவுகளையும் ஊடுருவித் தன் பார்வை போவதுபோல் அந்த நள்ளிருளில் சுற்றுமுற்றும் கூர்ந்துபார்த்தான். அச்சமயம் திடீரென அவன் நின்றுகொண்டிருந்த தாழ்வாரத்தின் ஒரு கோடியில் சிறு வெளிச்சமொன்று அவன் கண்ணுக்குப் புலப்பட்டது; காண்பது கனவோ நினைவோ என்று கண்களை நிமிட்டிக்கொண்டு ஒளி தோன்றிய பக்கமே மீண்டும் நோக்கினுன். அப்போது கையில் பந்தங்களைப் பிடித்துக் கொண்டு சில மானிட உருவங்கள் தன்னை நோக்கிவருவதாகத் தெரிந்தது. வந்தவர்களில் ஒருவன் ஆல்டீமன்; அவனுக்குமுன் விளக்கேந்திவந்தவர்கள் ஹக்கீம் என்னுங் காவலர் தலைவனும், அலி என்னும் சிறைச்சாலை உத்தியோகஸ்தனுமே. அந்நேரத்தில் அங்கே அம்மூவரையுங் காணவே, செபஸ்தியான் மிக்க ஆச்சரியங் கொண்டான். இதற்கிடையில் மேற்கூறிய மூவரும் செபஸ்தியான் நின்ற விடத்திற்கு வந்துவிட்டார்கள். ஆல்டீமன், காவலர் தலைவனை நோக்கி, "இந்த மனிதனை நம்பலாமா?" என்று கேட்டான்.

"ஆம், ஆண்டவனே, நிச்சயமாக நம்பலாம், இவன் தங்களுடைய மெய்க்காப்பாளருக்குள் ஒரு சிறந்த வீரன்! மிக்க தைரியசாலி! பிரமாணிக்கமுள்ள ஊழியன்,"

"அப்படியானால் அவனும் நம்மைப் பின் பற்றிவரட்டும்! அவன் உடைவாளுக்கு வேலை யிருந்தாலும் இருக்கலாம்."

ஹக்கீம் நமதிளவலை நோக்கி அவனை எச் சரிப்பவன்போல் இரகசியமாய், "ஊமையைப் போல் மௌனமாகவும் நாயைப்போல் படிமான மாகவும் இரு" என்றுரைத்தான். செபஸ்தி யான் பிரபுவும் பதில் வார்த்தைப் பேசாமல் மௌனமாய் அம்மூவரையும் பின்பற்றி நடந் தான். நேராகவும் கோணலாகவும் முன்னும் பின்னுமாய் அமைக்கப்பட்டுள்ள பல வழிகளி லும் சந்திலும் பொந்திலும் வளைந்து வளைந்து நடந்து, கடைசியாய் இருப்புச்சட்டங்களாலும் மூன்று பூட்டுகளாலும் காபந்துசெய்யப்பட்டி ருந்த ஒரு கதவண்டை வந்து நின்றார்கள். சிறைச்சாலை உத்தியோகஸ்தனாகிய அலி என்பவன் கதவைத் திறக்கவே, நால்வரும் உள்ளே நுழைந்தார்கள். அந்த நிலவறையில் ஒதங் கொண்ட கற்றரையின்மேல் முழந்தாளிட்ட வண்ணம் ஒருவரிருந்தார். அவர் இரண்டு குச்சி களை குறுக்காய் வைத்துக் கட்டிய ஒரு சிலுவை யைக் கரத்தில் பிடித்தவண்ணம் ஆழ்ந்த செபத் தியானத்திலிருந்தபடியால், அன்னியர் உள்ளே நுழைந்ததுகூட அவருக்குத் தெரியாதாம். தன் விளக்குடன் அலி அவர் அருகிற் சென்றான்; இவ்வாறு அங்கே தன் கண்முன் தோன்றிய நிர்ப் பாக்கிய கைதியை தன்னருமை நண்பர் கார்சி யாஸ் பிரபுவெனத் தெரிந்துகொண்டதால் செபஸ்தியான் மனதில் அச்சமயம் உண்டான உணர்ச்சிகள் எத்தகையினவென்று இதை வாசிப் போரே யூகித்தறிந்துகொள்ளலாம். அவரைக் கண்டதும் தனக்குள் எழுந்த ஆத்திரத்தையும் அங்கலாய்ப்பையும் அங்கே இருப்பவர்களையுங் கவனியாமல், தன் நிர்ப்பாக்கிய நண்பரைப் போய்த் தழுவிக்கொள்ளவேண்டுமென்னும் பேராவலையும் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொள்ள செபஸ்தியான் பட்டபாடு அவனைப் படைத்த ஆண்டவரே அறிவார்! கார்சியாஸ் பிரபு செபித்துக்கொண்டேயிருந்தார். கைதி யாகிய கார்சியாஸ், தான் வந்ததையுங் கவனியா மலிருந்த இருப்பைக் காணவே ஆல்டீமன் மனங் கோபத்தால் கொதித்தது; முகஞ் சிவந்தது; சினவெறிகொண்ட சிறுத்தையைப்போல் சீறிப் பிரபுவின் தோள்களைப் பிடித்திழுத்து, "நீ எரெடுத்துப்பார்ப்பதற்கும் நான் அருகனல்ல வென்று நினைத்திருக்கிறாயா? அடிமையினுங் கேடுகெட்ட ஆணவங்கொண்ட அடிமைப் பதரே நான் யாரென்று நீ உன் புத்தியில் எண்ணி னாய்?" என்று கதறினான்.

"கார்சியாஸ் பிரபுவோ மிக்க அமைதியான குரலுடன், ஆல்டீமனா வந்திருக்கிறது? நின் கையிற் சிக்கிய பேதை மாந்தரை இம்சிக்கப் பக லெல்லாம் ஒழியவில்லையோ? இராக்காலத்தில் இரைதேடித் திரிந்து இருளில் கொள்ளையடிக் கும்படி ஆந்தையைவிட்டு, பருந்து படுக்கைக்குப் போகுமன்றோ!" என்று பதிலுரைத்தார்.

"கிறீஸ்துவ நாயே, என்ன சொன்னாய்? உன் கர்வம் உன்னைவிட்டு எப்போதகலும்? உன் நாவை நீயே பிடுங்கிக்கொள்ளும்படி செய்யட் டுமா? என் கரத்தைக் கொஞ்சம் உயர்த்தி சாடைகாட்டுவதுதான்தாமதம், உன் சிரம் உருண்டு தரையில் விழுமென்று உனக்குத் தெரியாதா?"

"அப்படியானால் என் இப்போதே சைகை செய்யலாகாது? என்மேல் இரக்கம் காட்டும்படி யான் எப்போதாவது நின்னைக் கேட்டதுண்டா? எனக்கு மரணமே பாக்கியம், மரணமே சுயேச்சை!" இதைக் கேட்டதும் ஆல்டீமனுக்கு உண்டான கோபத்துக்களவில்லை. அவன் கண் களில் தீப்பொறி பறக்க, வாயில் நுரைதள்ள, கையுங்காலும் பதறித் துடிக்க, "மெய்தான்! அப்படியா சொல்லுகிறாய் நாயே? சரி, தயாரா யிரு, என் திறத்தைக் காட்டுகிறேன்!" என்று செபஸ்தியானை நோக்கி வாளை உருவிக்கொள் ளும்படி ஏவினான். இந்தக் கட்டளையைக் கேட் டதும் செபஸ்தியான் தேகம் நடுங்கிற்று! வாளை உருவிக்கொண்டு ஓங்கியவண்ணம் நின்றான். ஆனால் கார்சியாஸ் பிரபுவை சிரச்சேதஞ் செய் வதற்கல்ல. வருவது வரட்டும், ஆல்டீமனைத் தன் வாளுக்கிரையாக்கி பின்னர் ஹக்கீமையும், அலியையும் எதிர்த்து கொன்றுவிட்டு,கார்சியாஸ் பிரபுவுடன் ஓட்டம்பிடிப்பதே சரியென நம திளவல் தனக்குள் தீர்மானித்துக்கொண்டான். கையிலிருந்த வாளை ஓங்கியவண்ணம் சுழற்றிக் கொண்டிருக்கிறான். ஆல்டீமன் பேய்க்குரிய புன்முறுவலுடன், தன் தலைக்கு உண்டாக இருக் குந் தீங்கைப்பற்றி எள்ளளவும் சந்தேகங்கொள் ளாமல் அவனைப் பார்த்தவண்ணம் நிற்கிறான்.

தைரியத்தைக் கொஞ்சமுங் கைவிடாத பிரபுவோ தன் கண்களை மேலுயர்த்தி, கைகூப்பியவண்ணம், உரத்தசத்தமாய், "ஓ! ஆண்டவரே! உமது சித்தத்தின்படியே ஆகக்கடவது! உம்முடைய கரங்களில் என் ஆத்துமத்தை ஒப்புக்கொடுக்கிறேன்!" என்று ஜெபிக்கிறார். வேலையை முடிக்கும்படி ஆல்டீமன் சைகைகாட்டுஞ் சமயம், அக்குகை அறையின் கதவு திடீரெனத் திறக்கப்பட்டு, பாதாதிகேசபரியந்தம் வெண்போர்வையால் மூடியிருந்த ஓர் உருவம் வாசற்படியில் தோன்றினது. வந்த உருவம் தன் கரத்தைப் பயமுறுத்துவதுபோல் செபஸ்தியான் முன் நின்று, ஒரு வார்த்தையும் பேசாமலே வெகு காம்பீரத்துடன் ஓங்கிய வாளைத் தாழ்த்தும்படிச் சைகைசெய்து, உடனே மறைந்துவிட்டது.

(இன்னும் வரும்)

ச. செல்வன்.

சத்திய வேத ஆராய்ச்சி.

ஒரு சம்பாஷணை.

கோபாலன்.—என்ன கிருஷ்ணா, இன்று ஒருமாதிரியிருக்கிறாய்! அசௌக்கியமோ?

கிருஷ்ணன். — ஒன்றுமில்லை. கொஞ்சம் மனக்குழப்பந்தான். எதையோ ஒன்றை என் மனம் நாடுகின்றது; அதுவே கவலையாகவுமிருக்கின்றது; ஆனால் அது இன்னதென்றுமட்டுந் தெரியவில்லை.

கோ.—வெற்றியா? ஆஸ்தியா? வேறு என்ன? நீ விரும்புவனயாவும் உன்னிடம் இல்லையா?

கி.—மெய்தான், கோபாலா, எல்லாமிருந்தும் என்ன பயன்? விரும்புவனயாவும் வேண்டியமட்டுமிருந்தும், மனச்சந்தோஷமில்லையே. கொஞ்சகாலம் பொறுத்து என் வெற்றியும், தேக சுகமும், செல்வமும் போகும் வழி என்ன, சொல் பார்ப்போம். இந்த சீவியத்துடன் அவை அனைத்தும் மறைந்தொழியும், என் மரணத்துக்குப்பின் என் ஆத்துமா பயங்கரமான தண்டனைக்குள்ளாகுமானால் அவைகளால் எனக்குண்டாகும் பயன் யாது?

கோ.—செத்தபின் நீ கடவுளுடன் நித்தியானந்தத்தை யநுபவித்துக்கொண்டிருப்பாயென்று நம்புகிறேன்.

கி.—மெய்தான், இவ்வுலகில் அவரை யறிந்து நேசித்து சேவித்தால், அவரை யடையும் மார்க்கத்தில் நடந்தால், நான் அவர்தம் பாதகமலங்களைச் சேரக்கூடும். ஆனால் நான் சரியான மார்க்கத்தில் நடக்கிறேனோ? இந்தச் சந்தேகந்தான் என் மனதில் கவலையுண்டாக்கி என்னைத் துன்பப்படுத்துகின்றது.

கோ.—உன் வேதத்தை நம்பி, அதிற் கூறியிருக்கும் ஒழுங்கின்படி நடந்துவருகிறாயென்றல்லவோ நினைத்தேன்.

கி.—இதுகாறும் அப்படித்தான் செய்துவந்தேன். ஆனால் தற்சமயம் என் மனதில் ஒரு கேள்வி உதித்திருக்கிறது. அதாவது என் வேதம் மெய்யா, பொய்யா? நான் போகும் வழி சரியானதா அல்லது தவறானதா? நான் தேவனை நாடி நடக்கிறேனா, அல்லது அவரை விட்டு விலகிப்போகிறேனா?

கோ.—உனக்கு இத்தகைய விபரீத யோசனைகள் உண்டானதின் காரணமென்ன?

கி.—சில நாளாய் நமது வேதத்தையும் அதன் மூலாதாரங்களையும்பற்றி ஆராய்ச்சிசெய்துவந்த நான், நினைத்ததுபோல், நமது வேதம் பலமான அஸ்திவாரத்தின்மேல் கட்டப்பட்டிருப்பதாகத் தோன்றவில்லை.

கோ.—என்ன அஸ்திவாரமப்பா, நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லை.

கி.—விளங்கச்சொல்கிறேன், கேள். நீயும், நானும், அநேகமாய்ப் படித்த இந்துக்கள் யாவரும் ஏதோ ஒருவித வேதாந்தக் கொள்கைகளைத் தழுவினவர்கள் என்பது உனக்குத் தெரிந்த விஷயம். வேதாந்தக் கொள்கைகளின் அஸ்திவாரம் வேதத்தின் அந்தம் அல்லது உபநிஷதங்களாம். அவற்றை நாம் கடவுளருளிய வார்த்தையாகிய சுருதி என்கிறோம். உபநிஷதங்கள் கடவுளால் அருளிச்செய்யப்பட்ட உபதேசமொழியா, இல்லையா?

கோ.—அதற்கென்ன சந்தேகம்?

கி.—இதுவரையில் இல்லை; ஆனால் இப்போதுதான் சந்தேகம் ஏற்பட்டது. அவற்றின் அஸ்திவாரங்களைக் கவனித்து ஆராயத்தொடங்

கவே, நான் இதுகாறும் ஏமாந்தவனுயிருந்ததாகத் தோன்றிற்று ; அவைகள் யாவும் கலகலத்து பலமில்லாதனபோல், என் புத்தியிற்பட்டது.

கோ.—கிருஷ்ணு, நன்ருய் யோசித்துப்பார். இத்தகைய மகத்தான விஷயத்தைப்பற்றி ஆலோசனை செய்யவாவது அல்லது ஏதாவது ஒரு முடிவுக்கு வரவாவது உனக்குத் தத்துவமில்லை. உபனிஷதங்களை யாராய்ச்சிசெய்து அவற்றின் உண்மைப்பொருளை யறியவல்ல கலைஞர்களுக்கும் ஞானிகளுக்குமே இந்தத் தத்துவமுண்டு. உபநிஷதங்களை சரியானவிதமாய்க் கண்டறிந்து மற்றவர்களுக்குப் போதிக்கக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவர்கள் அவர்களே.

கி.—நீ சொல்லும் விஷயமே என் மனக் குழப்பத்தின் காரணம். நமது வேதப்புத்தகங்கள்மட்டில் எனக்கிருந்த விசுவாசத்தை ஆட்டியசைத்துத் தத்தளிக்கும்படிச்செய்வது, மேற்கூறிய வேத நிபுணர்களாகிய சாஸ்திரிகளின் அபிப்பிராயமே. உதாரணமாக டியூஸன் என்னும் மேற்குல சாஸ்திரியை எடுத்துக்கொள்ளுவோம். அவர் உபநிஷதங்களில் மிக்கத் தேர்ச்சியடைந்து, அவைகளைப்பற்றி அதிகாரத்துடன் பேசும் வல்லமைவாய்ந்த சாஸ்திர நிபுணர். அவரை விவேகானந்த சுவாமிகள் "இந்தியாவையும் அதன் கோட்பாடுகளையும் மெய்யாகவே நேசிக்கும் உத்தமசீலர்" என்கிருர். அத்தகைய நண்பராகிய இவர் சொல்வதைக் கேள் : "வேத சாஸ்திரத்திலும், சிருஷ்டி விஷய சாஸ்திரத்திலும், ஆத்தும தத்துவசாஸ்திரத்திலும், உபநிஷதங்கள் பல கடினமான ஒவ்வாமைகளும் மாறுதல்களும் நிறைந்திருக்கின்றன." நீ இதை நம்பமாட்டாய் ; ஆனல் அவரால் இயற்றப்பட்ட "இந்திய தத்துவசாஸ்திரச் சுருக்கம்" என்னும் ஆங்கிலேய நூலை வாசித்துப்பார் ; அப்போது நான் சொல்லுவதின் உண்மை விளங்கும் ; நான் அவர் அபிப்பிராயத்தைத் தவறுதலாய்ச் சொல்லவில்லையென்று தெரிந்துகொள்வாய். மேலும் அவ்வாசிரியரே யியற்றியுள்ள "வேதாந்த எற்பாடு" என்னுங் கிரந்தத்தையும் படித்துப்பார். அந்நூலில் "உபநிஷதங்களில் மலிந்துள்ள ஒவ்வாமைகளைப்"பற்றிப் பேசுவதைக் கண்டறிவாய். வேண்டுமானல் தீபாட் என்னும் பேர்போன சாஸ்திரியின் அபிப்பிராயங்களைப் பார்ப்போம். டியூஸனைப்போல அவரும் இந்தியாவின் சிநேகிதரே ; தன் சீவியத்தின் முக்கிய பாகத்தைப் பெரும்பாலும் இந்தியர்கள் நடுவில் செலவழித்தவர். வேதாந்த சூத்திரங்களுக்கு அவர் எழுதியிருக்கும் முன்னுரையில், முழு உபநிஷதங்களின் உபதேசத்தை, ஒவ்வாமை, மாறுபாடுமுதலிய தவறுதல்களின்றி ஒருவித எற்பாட்டின்கீழ் கொண்டுவந்து நிறுத்துவது அசாத்தியம்" என்கிருர்.

கோ.—ஓ! இது ஐரோப்பியர் கொள்கை. அவர்களுக்கு இந்தியர்கள் என்ருல் எப்போதும் பிடிக்கிறதில்லை. அவர்கள் எப்போதும் நம்மை எதிர்த்து, இந்திய நாமம்பூண்ட தெதுவாயினும் அதைப் பழித்துக் குறைகூறுவார்கள். நமது வேதப்புத்தகங்களையும் இக்கெட்ட எண்ணத்துடன்தான் ஆராய்ச்சி செய்திருக்கவேண்டும்.

கி.—நீ பேசுவது நியாய விரோதமாயிருக்கின்றது. டியூஸன், தீபாட் என்னும் சாஸ்திரிகள், தாம் சொல்லியிருப்பதற்கு மாருய் நமக்கு அநுகூலமாய்ப் பேசியிருந்தால், நாம் அதை அகமகிழ்ந்து வாவேற்று, மேற்கோளாக எடுத்துரைக்கப் பின்வாங்குவோமா? நாம் விரும்பினும் வெறுப்பினும் சத்தியம் சத்தியமே. அதைப்பற்றி ஐரோப்பியனுயினுஞ்சரி, இந்தியனுயினுஞ்சரி, யார் பேசியபோதிலும் எனக்கெல்லாம் ஒன்றுதான். இந்தியாவின் உண்மை சினேகிதர்களாகிய அந்த ஐரோப்பிய சாஸ்திரிகளின் அபிப்பிராயங்களை அடியோடு தள்ளிவிட்டாய். நல்லது, நமது பழய இந்து சாஸ்திர விசாரணையில் நெடுநாளுழைத்து, நடுவுநிலைமை குன்ருமல் அபிப்பிராயங்கள் கொடுக்கவல்ல ஒரு இந்திய சமஸ்கிருத பண்டிதரைக்கொண்டு, மேற்கூறிய சாஸ்திரிகளின் கொள்கை நேரிதென ருசுப்படுத்திவிட்டால், என்ன சொல்வாய்?

கோ.—அது முடியாத காரியம்.

கி.—முடியுமா, முடியாதா என்று பார் R. G. பந்தர்க்கர் என்னும் சீமானைப்பற்றி நீ கேள்வியுற்றதுண்டா? "வைஷ்ணவ சைவ மதங்கள்" என்னுந் தலைக்குறிப்பிட்டு அவர் வரைந்திருக்கும் ஆங்கிலேய நூலில் அவர் சொல்வதாவது : "கடவுளியல்பு, மனிதனும் உலகும், அவற்றிற்குள்ள சம்பந்தம் இவற்றைப்பற்றிய கொள்கைகளின் எற்பாடு ஒன்றல்ல பல வேறு வகையினதென்று உபநிஷதங்கள் போதிப்பதாக, அவற்றை யூன்றிப்படிப்பதால் தெரியவருகிறது."

கோ.—இது ஒரு பலத்த நியாயந்தான்.

கி.—பந்தர்க்கரும் ஐரோப்பிய கொள்கையைத் தழுவினவர் என்று சொல்லமாட்டாய் என்று நம்புகிறேன். ஆனுல் என் நியாயங்கள் இத்துடன் நிற்கவில்லை. எனக்குப் பல முறையும் சந்தேகத்தைக் கொடுக்கும்படியான வேருெரு விஷயம் உண்டு. நீ சங்கராச்சாரியருடைய கொள்கைகளைத் தழுவி நடப்பவன். நானுே இராமானுஜாச்சாரியருடைய கோட்பாடுகளை அனுசரிப்பவன். கடவுள் ஒருவரே நிஜமாகவும் நிலைகொண்டும் இருக்கிருர் என்றும், வானமும் பூமியும், அவற்றுள் அடங்கிய சராசரமனைத்தும், நீயும், நானும், மாய்கை, நிலைகொள்ளாதனவென்றும் சங்கரர் போதிக்கிருர்; இந்தக் கொள்கைக்காதாரம் உபநிஷதங்கள்தாம் என்று அவரே சாதிக்கிருர். இராமாநுஜரோ, உபானமாதியயாவும் நிஜமும் நிலைகொண்டவையுமெனச் சாதிப்பதுடன், தமக்காதாரமாக அந்த உபநிஷதத்தையே எடுத்துக்கொள்கிருர். இவ்விரு ஆசிரியர்க்குள் எவரேனும் ஒருவர் கொள்கை தவறுதலாயிருக்கவேண்டுமென்பது வெளிப்படை. இவர்களுடைய கொள்கைகளில் இன்னது மெய்யென்று தீர்மானிப்பதெங்ஙனம்? யார்? உபநிஷதங்களின் மெய்யான படிப்பினைதான் என்ன? ஒருக்கால் இந்த இரண்டு வித மாறுதலானக் கொள்கைகளுக்கே உபநிஷதங்கள் இடங்கொடுத்தாலும் கொடுக்கலாமன்ருே? அப்படியானுல், முக்கியமான விஷயங்களில் உபநிஷதங்கள் மாறுதலான கொள்கைகளைப் போதிக்கின்றனவென்று சொல்லக் காரணமிருக்குமன்ருே? இதற்கென்ன சொல்லுகிருய்?

கோ.—நான் என்ன சொல்லக்கிடக்கிறது? நீ என்னையுங் குழப்பிவிட்டாய். உன்னுடைய கலக்கம் இன்னதென்று எனக்கிப்போதுதான் விளங்குகிறது. கடவுள் சத்தியத்தை வெளிப்படுத்தாமலே நம்மை இவ்வுலகில் விட்டுவிட்டார் என்று நாம் முடிவுசெய்துவிடுகிறதா?

கி.—நான் அப்படி நினைக்கவில்லை. எங்கேயாவது எச்சமயத்திலாவது கடவுள் சத்தியத்தை வெளிவிட்டிருக்கவேண்டுமென்பது நிச்சயம். அப்படி எங்கே நடந்திருக்கக்கூடும் என்று இதுகாறும் திட்டமாயறிய என்னுல் முடியவில்லை. ஆனுல் அதைத் தெரிந்துகொள்ளக்கூடிய வழியில் இப்போது பழகிவருகிறேன். சில தினங்களுக்குமுன் என் கத்தோலிக்கு நண்பன் ஒருவனிடம் என் மனச்சங்கடத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டேன். அதன் விஷயமாய் அவன் எனக்கு ஒரு துண்டு கடிதத்தில் பின்வருமாறு எழுதினுன்:—

“கடவுள் அருளிய சத்தியத்தையுடையது கத்தோலிக்கு திருச்சபை. அதை ஸ்தாபித்தவராகிய சேசுக்கிறீஸ்துநாதரால் அச்சத்தியம் அருளப்பட்டது. சேசுக்கிறீஸ்துநாதரோ மனிதாவதாரமெடுத்த கடவுள். அவர் அருளிச்செய்த சத்தியங்களாவன:— வானம், பூமி முதலிய யாவற்றையும் படைத்த கடவுள் ஒருவரே! அவர், பிதா, சுதன், இஸ்பிரீத்துசாந்துவென்னும் மூன்ருட்களாயிருக்கிருர்; 1900 வருஷங்களுக்கு முன் பலஸ்தீன் நாட்டில் நசரேத்தென்னு மூரில் ஒரு அமலோற்பவ கன்னிகையின் வயிற்றில் அற்புதமாய் மனிதரூபங்கொண்ட, திரித்துவத்தின் இரண்டாமாளாகிய சுதனுகிய சர்வேசுரனே சேசுக்கிறீஸ்து என்பவர். தம்முடைய வார்த்தையாலும் நன்மாதிரிகையாலும் இரட்சண்ய வழியையும், நமது பாவவிமோசன மார்க்கத்தையும் நமக்குக் காட்டும்பொருட்டே அவர் மனிதாவதாரமெடுத்தார். அவர் இவ்வுலகில் 33 வருஷங்கள் சீவித்து சிலுவையில் மரித்தார். மரணத்துக்குப்பின் மூன்ரும் நாள் அவர் மகிமைப்பிரதாபத்தோடு உயிர்த்தெழுந்தார். அதன் பின் நாற்பதாவது தினம் ஒரு பெரிய ஜனக்கூட்டத்துக்கு எதிரில் அவர் வானத்துக்கு எழுந்தருளிச் சென்ருர். அவர் மோட்சத்துக்குப் போகுமுன் ஸ்தாபித்த சபையே திருச்சபை என்னப்படும்; தம் போதகங்களை எல்லாம் அத்திருச்சபையினிடம் ஒப்படைத்து, மறுவுலகில் தம்மோடு நித்திய பேரின்பத்தை யடையும் பொருட்டு இவ்வுலகில் நாம் எப்படி பரிசுத்தவான்களாய் சீவிக்கவேண்டுமென நமக்குப் போதிக்கும்படி ஏவினுர். அத்திருச்சபையில் சேர்ந்து, அதன் போதனைகளை விசுவசித்து, கடவுளிடம் நம்பிக்கைவைத்து, எல்லாத்தையும் பார்க்க அவரை நேசித்து, இனி ஒருபோதும் பாவஞ்செய்வதில்லை என்னும் பிரதிக்கினையுடன் செய்த பாவங்களுக்காக மெய்யான உத்தம மனஸ்தாபப்பட்டு இவ்வுலகில் சீவித்தல், இரட்சண்யம் அடைவதற்கு இன்றியமையாத சாதனங்களில் ஒன்ரும். அவர் வெளிப்படுத்திய சத்தி

யத்தின்பிரகாரம் உலகத்திற்கு முடிவுண்டு. உலக முடிந்தபின், செத்தவர்களின் ஆத்துமங்கள் தங்கள் சரீரங்களுள் சேர்ந்துவிடும். பின்னர் எல்லோரையும் சேசுக்கிறீஸ்துவானவர் நடுத்தீர்ப்பார்; நல்லவர்கள் நித்திய பாக்கியத்தை அநுபவிக்க அவருடன் மோட்சத்துக்குப்போவார்கள்; தங்கள் பாவங்களுக்கு மனஸ்தாபப்படாத பாவிகள் அவரைவிட்டு சதாகாலத்துக்கும் பிரிந்துபோய், நித்திய நரகத்தில் நிர்ப்பாக்கியமாய்ப் புதைக்கப்படுவார்கள்.''

கோ.—ஓ! இப்போது தெரிகிறது உன் மனக்குழப்பத்தின் காரணம்—ஒரு பெரிய சந்தேகம்!

கி.—ஆம், கத்தோலிக்கருடைய கொள்கையே மெய்யானதென்று வைத்துக்கொண்டால், நம்முடைய கதியென்ன?

கோ.—அப்படியானுல் நீ என்ன செய்ய யோசித்திருக்கிறாய்?

கி.—நான் அதைப்பற்றி விசாரணைசெய்து, மூலபொருளைக் கண்டறியவேண்டும்.

கோ.—நீ சொல்வது வாஸ்துவந்தான். கத்தோலிக்கு வேதமே கடவுளால் அருளப்பெற்ற சத்திய மறையெனத் தெரிந்துகொள்ளுகிறாய் என்று வைத்துக்கொள்வோம். அதன்பின்னர் என்ன செய்வாய்?

கி.—கோபாலா, நீ எனக்கு உண்மைக்குத் தாரமுடைய மெய் நண்பனுயின்—நீ என் நன்மையையே எப்போதுங்கோருபவனுயின்—நான் கத்தோலிக்கு வேதமே மெய்யான வேதமெனக் கண்டறிந்தபின் செய்யவேண்டியது இன்னதென்று நீயே சொல்—பார்ப்போம்.

கோ.—நல்லது, இந்தக் கேள்விக்கு இரண்டே மறுமொழியுண்டு, அவற்றில் எதைக் கூறுவதென யான் எப்படித் தயங்கமுடியும்? உன்னுடைய லௌகிக நன்மைக்கல்ல, ஆனுல் ஆத்துமார்த்தமான நித்திய பேரின்பத்துக்கு இன்றியமையாத விஷயத்தைப்பற்றிய உண்மையைத் தேடிக் கண்டறிய முயன்றுவருகிறாய். நித்தியானந்தம் அடைவதற்கு வழி கத்தோலிக்கு வேதமொன்றே தவிர வேறு கிடையாதென நீ கண்டறிந்தால், அந்தத் திருச்சபையின் கொள்கைகளைக் கைப்பற்றி அதில் உட்பட நீ மறுப்பாயானுல் அது நியாய விரோதமாகுமன்றோ? அப்படிச்செய்வதால் நீ சில லௌகிக நன்மைகளை இழப்பினும் இழக்கலாம். ஆனுல் நித்திய நிர்ப்பாக்கியம் நித்தியானந்தம் என்னும் இவ்விரண்டில் எதைத் தெரிந்துகொள்வது என்னும் கேள்வி பிறக்கும்போது, லௌகிக நன்மைகளைப்பற்றி யோசிக்கலாமா?

கி.—சரி, நீ என்ன செய்ய யோசித்திருக்கிறாய்? நான் இபபோது சொல்லிவந்தவை அனைத்தும் உனக்கல்லவென்றெண்ணினுயோ?

கோ.—அப்படியா நினைக்கிறாய்? ஒருபோதுமில்லை! ஒன்றுமட்டும் நிச்சயம்; எங்கே உண்மையிருக்கிறதென்று தெரிகிறதோ, உடனே அதைக் கைப்பற்றுவதெனத் தீர்மானித்துவிட்டேன். நான் இதுகாறும் என் ஆத்தும காரியங்களைப்பற்றிக் கவனியாமலிருந்தேன். என் வேதத்தைப்பற்றி எனக்குத் தெரிந்தது சொற்பமேனும் அதுவே போதுமானதென்றிருந்துவிட்டேன். வேத விஷயத்தில் நீ காட்டிய அக்கறை என் மயக்கத்தைத் தெளிவிக்கும் மருந்தாயிற்று. நண்பா, அஞ்சாமல் முன்னடந்துபோ, நான் உன்னைப் பின்பற்றிவருகிறேன்.

கி.—ஒரு விஷயம் நாம் எப்போதும் மறக்கலாகாது. நான் தேவனைப் பார்த்து ஜெபிக்க வேண்டுமென என் கத்தோலிக்கு நண்பன் வற்புறுத்திச் சொன்னுன். சத்தியத்தை அறிந்து கைப்பற்றுவதற்கு ஜெபம் அத்தியாவசியம் என்றான். இருளிற் கிடந்துழலும் நமக்கு வெளிச்சம் அவசியமன்றோ? பலவீனர்களாகிய நமக்கு பலம் வேண்டுமல்லவா? ஞானப்பிரகாசமும் ஞானப்பலமும் வேண்டுமெனக் கடவுளைப் பார்த்து நாம் கேட்கவேண்டும். அவர் நமது நேசத்தை, தமது பிரிய மக்கள் கேட்பதை அவர் தட்டாமற் கொடுப்பார். அடிக்கடி உச்சரிக்கும் படி அவன் எனக்குச் சொல்லிக்கொடுத்த ஜெபம் இது. கருதினுல் நியூமென் என்பவர் இயற்றிய ஜெபத்தின் ஒரு பகுதியாம் இது. அவரும் நம்மைப்போலவே சத்தியத்தைக் கண்டறிவதற்கு முன் மிக்க மனக்கஷ்டமும் கலக்கமுமடைந்தவராம். ஆனுல் அவர் அதைக் கண்டறிந்தவுடனே கொஞ்சமுந் தாமதிக்காமல் கத்தோலிக்கு திருச்சபையிற் சேர்ந்துகொண்டனராம்:—

“தயையொளியே, சூழ்ந்திருக்கும் இருள் நடுவில் வழி காட்டி, என்னை நடப்பிப்பாயே!

இரவு இருண்டிருக்க, நான் வீட்டுக்கு வெகு தொலையிலிருக்கிறேன்; என்னை நடப்பிப்பாயே!

என் பாதகங்களை அடக்கும்; தொலையிலிருக்குங் காட்சியைக் காணவேண்டுமென நான் கேட்கவில்லை, ஒரே ஒரு அடியெடுத்துவைத்தால் அதுவே எனக்குப் போதுமானது."

A SHORT SKETCH OF THE LIFE OF FR. BESCHI.

சங். வீரமாமுனிவருடைய சரித்திரச் சுருக்கம்.

(முன் தொடர்ச்சி.)

3-ம் பிரிவு.

தஞ்சாவூரிலுள்ள இராஜாக்களால் குருக்களுக்கும் விசுவாசிகளுக்கும் அனேக நெருக்கிடைகளுண்டாக, இரு குருப்பிரசாதிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் சிறையிலே மரித்தார். கிறீஸ்துவர்களோ வாக்குக்கெட்டாத துன்பங்களைப் பட்டுவந்தார்கள். இந்தக் காரணத்தைப்பற்றி குருக்கள் தஞ்சாவூர் இராச்சியத்தில் தங்காமல் வேறு நாடுகளில் வேதம்போதித்து வந்தார்கள்.

மறவன் தேசத்திலும் குருக்களுக்கு பல நெருக்கிடைகளுண்டாயிருந்தன. வீரமாமுனிவர் இந்தியாவுக்குப் புதிதாய் வந்துசேர்ந்தபோது, மறவன் தேசத்து அரசனும், கிழவன் என்று அழைக்கப்பட்டவனுமான இரங்காத தேவன் என்பவன் தன் 80-ம் பிராயத்தில் இராமநாதபுரத்தில் மரித்தான். இவன் தைரியமற்ற கோழை. பெருந் திண்டிக்காரன். காமாதுரன். இப்பேர்ப்பட்ட நிஷ்டூரகுணங்களைக்கொண்டவன் கிறீஸ்துவர்களை ஈவிரக்கமின்றி வேதவிஷயமாக நானாவிதத்தில் துன்பப்படுத்தி உபாதித்துவந்தான். இந்த குரூரன்தான் முத்திப்பேறுபெற்ற அருளானந்தரைக் கொலைசெய்வித்தவன். இவன் செத்தபின் இவனுடைய மனைவிகளும் வைப்பாட்டிகளுமான 47 ஸ்திரீகளை அக்காலத்து அக்கிரம வழக்கப்படி இவனுடைய பிரேதத்துடன் சவக்குழியில் போட்டு சுட்டெரிக்கும்படி நேரிட்டது. ஊருக்குச் சற்று தொலைதூரத்தில் ஆழமும் அகலமுமான பிரமாண்டமானதோர் குழி வெட்டப்பட்டது. அக்குழி சாதாரண கட்டைகளாலும் வேறு வாசனை கட்டைகளாலும் நிரப்பப்பட்டு, அதன்மேல் பானை பானையாய் நெய் ஊற்றப்பட்டது. அரசனுடைய சவம் நேர்த்தியான வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கப்பெற்று அழகான தேரில் வைக்கப்பட்டு சமுத்திரம்போல் திரண்டுவந்த ஜனத்திரட்சியால் சூழப்பட்டுக் கணக்கற்ற கொட்டுமுழக்கு வாத்தியங்களுடன் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப்பட்டது. விறகு கட்டைகள் அடுக்கப்பட்ட குழியின் அடிபாகத்துக்கு நெருப்பு வைத்தக்ஷணமே அரசனுடைய சடலம் கட்டைகள்மேல் வைக்கப்பட்டது. அப்போது பிராமணர் பல சடங்காசாரங்களைச் செய்துமுடித்தபின் இறந்துபோன அரசனுடைய மனைவிகளான இரண்டு பேரும் வைப்பாட்டிகளும் நேர்த்தியான வஸ்திரங்களை அணிந்து விலையேறப்பெற்ற நகைநட்டுகளை சரீர முழுதும் பூண்டுகொண்டு சுகந்த பரிமள பூமாலைகள் கழுத்தில் தரித்துக்கொண்டு சவக்குழியைச்சுற்றிலும் பலமுறை பவனிசெய்தனர். இதற்குப்பின் காலஞ்சென்ற அரசனுடைய சிரேஷ்ட மனையாட்டியான இராணி, அங்கு தொனிக்கும் சங்கீத வாத்தியங்கள் கேட்டபோதும், அவ்விடத்தில் விஜயஞ்செய்திருக்கும் அரசா, சிற்றரசர், மந்திரி பிரதானிகள், ஜமீன்தார், மிட்டாதார் முதலிய மகான்களை கண்ணோக்கியபோதும், சமுத்திரம்போல் பரவியிருக்கும் ஜனக்கூட்டத்தைப் பார்த்தபோதும், தான் சீக்கிரத்தில் நெருப்பில் சுட்டெரிக்கப்படுவதாலுண்டாகும் வேதனையை மறந்தவளாய், மனோற்சாகங்கொண்டு, தன் எஜமானன் அரசனுடைய பட்டயத்தை காம்பீரியத்துடன் தன் கையில் ஏந்திக்கொண்டு தனக்கு எதிராக நடந்துபோகும் புது இராஜாவை நோக்கி இவ்வாறு கூறுவாள்: "இதோ பாரும்" தன் கையிலுள்ள பட்டயத்தை மேலே உயர்த்தி "இதோ பாரும் இந்த வாளை! இந்த ஆயுதத்தை உபயோகித்த எமது அரசர் தமது சத்துருக்களை வென்றொழித்து ஜெயசீலரானார். நீரும், அகாரணமாக இதை உபயோகியாமலிருப்பதுடன் உமது பிரஜைகளின் இரத்தத்தால் இதைக் கறைப்படுத்தா

திருப்பீராக. எமது அரசர் தமது பிரஜைகளை அன்பு நீதியுடன் பரிபாலனஞ் செய்ததுபோல் நீரும் அரசுபுரிவீராக. இவ்வாறு செய்வீராகில் சுகசெல்வமான நீடிய வாழ்வைக் கைக்கொள்வீர். என் நேசக் கணவனான இராஜா காலஞ்சென்றபின் நான் இப்பூவுலகில் இருப்பதில் பயனென்ன? அவர் போன இடத்துக்கு அவரை நான் பின்செல்வது யுக்தம்" என்று மொழிந்தபின், தன் கையிலிருந்த வாளை புது அரசனுடைய கையில் கொடுத்தாள். அதை அவன் தன் கையில் வாங்கினவுடனே, முதல் இராணி மறுபடியும் வாய்திறந்து பூலோகத்தின் இன்பசுக பாக்கியமெல்லாம் எப்படி முடிவுபெறுகிறது பாருங்கள்! என்று வாய் குளறி மொழிந்தபின், உயிரோடு நான் நரகத்துக்குப் போகிறேன் என்று தன் தேவர்களுடைய பெயர்களை உச்சரித்துப் பெருங் குரல் பாய்ச்சிக் கதறி, ஊளையிட்டுக்கொண்டு குழியில் குதித்தாள்.

இரண்டாவது இராணி, புதுக்கோட்டை தொண்டமான் அரசரின் சகோதரி. தன் சகோதரி அணிந்திருந்த விலையுயர்ந்த நகைகளைக் கழற்றிக்கொள்ளும்படி அங்கு அவர் வந்திருந்தார். கண்ணீர் அழுகையுடன் தன் சகோதரியின் நகைகளைக் கழற்றியபின் அவர் அவளை அன்போடு தழுவி முத்தமிட்டார். அந்த நிர்ப்பாக்கிய ஸ்திரீயோவெனில் நெருப்புக்குழியை சற்றுநேரங் கண்ணோக்கிப் பார்த்தபின், சிவா சிவா என்று அலறி குழியில் விழுந்தாள். மற்றப் பெண்பிள்ளைகளும் ஒருத்திக்குப்பின் ஒருத்தியாய் நெருப்புக்குழியில் விழுந்தார்கள். அவர்களுக்குள் ஒருத்திமாத்திரம் பயப்பிராந்தத்தால் பீடிக்கப்பட்டு நெருப்பில் குதியாமல் அருகாமையில் நின்றுகொண்டிருந்த புது கிறீஸ்துவனை ஒரு சேவகனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு நெருப்பினின்று தன்னை இரட்சிக்கும்படி மன்றாடினாள். இப்பேர்ப்பட்ட அக்கிரம காட்சியைப் பார்க்கக்கூடாதென்று எச்சரிக்கப்பட்டிருந்தும் நூதனப்பிரியத்தால் தூண்டப்பட்டு வேடிக்கை நிமித்தம் வந்திருந்த அச்சேவகன் தன்னைக் கட்டிப் பிடித்திருந்த பெண்பிள்ளையை எவ்வளவு மகா பலமாய் நெருப்புக்குழியில் தள்ளினனெனில் இருவரும் அதில் புரண்டு விழுந்தார்கள். சேவகனோ தட்டுத்தடுமாறி குழியினின்று தப்பித்துக்கொண்டபோதிலும் அவனுக்குக் கனத்த, காய்ச்சலுண்டாகி அன்றிரவே இறந்துபோனான்.

சிரேஷ்ட இராணி, நான் உயிரோடு நரகத்துக்குப் போகிறேனென்று அக்கினிக்குழியில் குதித்ததைக் கண்டவர்களனைவரும் அதிசயங்கொண்டனர். இந்த இராணியின் வேலைக்காரிகளுக்குள் ஒரு கிறீஸ்துவளிருந்தாள். இவள் அப்போதைக்கப்போது கிறீஸ்து வேதத்தின் சத்தியங்களைப்பற்றி இராணிக்கு உணர்த்திவருவாள். கிறீஸ்து வேதமே சத்திய வேதமென்று இராணி அறிந்திருந்தும், ஆசாபாசத்துக்கு அடிமையாகி பாவச்சேற்றில் மூழ்கி விழுந்தபடியால் மெய்யான வேதத்தைக் கைப்பற்ற தைரியமற்றிருந்தாள். இதை நினைவுகூர்ந்தே நான் உயிருடன் நரகத்துக்குப் போகிறேனென்று சொல்லி நெருப்புக்குழியில் விழுந்தாள்.

இன்னிர்ப்பாக்கிய ஸ்திரீகள் நெருப்புக் குழியில் குதிப்பதற்குமுன் அவர்களுக்கு உண்டாயிருந்த தைரியம் முகப்பிரீதியாலும் ஒருவித உற்சாகத்தாலும் உண்டானதே ஒழிய மற்றப்படியல்ல. அதெப்படியெனில், சுவாலித்தெரியும் நெருப்பின் அனலைப் பொறுக்கமாட்டாதவர்களாய் ஒருத்தி மற்றொருத்திமேல் விழுந்து, தட்டுத்தடுமாறி அழுது ஊளையிட்டுக்கொண்டு நெருப்புக்குழியினின்று வெளிப்பட அங்குமிங்கும் பாய்ந்து பித்துப்பிடித்தவர்களைப்போலக் கலங்கித் திகைத்தும் அவர்களுடைய முயற்சி வீணானது. மேலும் அவர்களிட்ட அழுகைக் குரலைக்கேட்ட ஜனங்கள் பரிதாபப்பட்டார்கள். ஆனால் விறகுக்கட்டைகள் கட்டுக்கட்டாய், பாவம்! அந்த நிர்ப்பாக்கிய ஸ்திரீகள்மேல் போடப்பட்டபோது அவர்களுடைய அழுகைச் சத்தங் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்து கடைசியாய் நெருப்பால் சுட்டெரிக்கப்பட்டார்கள். அவர்கள் இவ்வாறு நெருப்புக்கு இரையானபின் பிராமணர் அங்கு கூடி பல சடங்குசாங்கியங்களை நிறைவேற்றி, கருகலான எலும்புகளை சேர்த்தெடுத்து அவைகளை விலையுயர்ந்த வஸ்திரங்களால் பொதிந்து ராமேஸ்வரத்துக்குக் கொண்டுபோய் கடலில் எறிந்துவிட்டார்கள். இதற்குப்பின் அந்தக் குழி தூர்க்கப்பட்டு இறந்துபோன அரசனுடையவும் இராணிகளுடையவும்பேரால் ஒரு கோவில் கட்டப்பட்டு, ஷை இராணிகள் தேவதைகள் கணக்கில் சேர்க்கப்பட்டனர்.

வீரமாமுனிவர் மதுரை மிஷனுக்கு வந்து சேர்ந்தபோது உடன்கட்டையேறுகிற இக்குரூர விஷயத்தைப்பற்றிக் கேள்விப்பட்டு நரகப் பசாசுக்கு அடிமையானவர்களை இரட்சிக்க அபிலாஷைகொண்டு, இந்நிர்ப்பாக்கிய தேசம் பாவ நிழலினின்று மீட்புப்பெறும்படி இடைவிடாமல் கர்த்தரைப்பார்த்து மன்றாடிவந்தார்.

(இன்னும் வரும்.)

J. M.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

மதுபானம்.

ஐயா,

மதுபானத்தின் கெடுதியைப்பற்றி பல்லோர் பன்முறை எழுதியுள்ளார். என்றாலும் அடியேனும் என் புல்லறிவுக்குப் புலப்பட்ட அளவில் ஒருவாறு புகலுவேன். அதனைத் தயைசெய்து ஆயனில் பிரசுரிக்க வேண்டுகிறேன். தீமைகளுக்கெல்லாம் இருப்பிடமாகிய இக்கொடிய பானத்தினால் கெட்டழிந்து சிதைந்துபோனவர்கள் அனந்தம் கோடாகோடியே. இம்மகா பாதகபானத்தை பானஞ்செய்து பழகியவர்களைத் தொத்துவியாதியின் வாய்க்குள்பட்டவர்களெனத் திட்டமாய்ச் சொல்லலாம். எங்கும் பரவிவரும் இப்பயங்கர வியாதியைச் சங்கரிக்க, மதுவிலக்குச் சங்கங்கள், மதுவிலக்கு உபந்நியாசங்கள், மதுவிலக்குப் பிரசுரங்கள் என்ற ஒளஷதங்கள் எங்கும் வழங்கப்பட்டும் இக்குடிகேடான நிர்ப்பாக்கிய வியாதியாகிய இப்பாழுங் குடிபட்டொழிந்துபோனபாடாயில்லை. தீமை, கஷ்டம், துன்பம், தரித்திரம் இவைகளுக்கு வித்தாகிய இப்பயங்கர பானத்தில் சிக்காமல் தப்பினவர்கள் நரகத்துக்குத் தப்பினவர்களுக்கு சமானமாகிறார்கள் என்றுஞ் சொல்லலாம். தான் மதிமயங்கித் தியங்கப் பானமருந்தித் தன்னையும் தன் குடும்பத்தையும் பிறரையும் அதோகதியாக்குகிறார்கள். தான் மதிமயங்கினதின்பின் படும்பாடு பெரும்பாடே. இவனுக்கு இகலோகம் பரலோகமாகவும், பரலோகம் பூலோகமாகவும் மாறிவிடுகின்றன. உணர்வு மாறினதும் ஓ! ஆ! ஐயோ! என்று அலறுவான், பதறுவான், கூவுவான், அழுது ஓலமிடுவான். இவன் படும் துன்பம் இவன்மட்டும் உணரலாகும். இவனுக்கு சற்றுமுன் எவ்விதம், இப்போது எவ்விதம் என்றுணரச் சக்தியில்லை, புத்தியில்லை, ஞாபகமில்லை. இப்போது ஒரு நம்பிக்கையுமற்றவனாகி, உள்வேதனையும், வெளிவேதனையும் அநுபவித்துத் துன்பமுறுகிறான். இவ்வேளை இவன் அருமை மனைவிமக்கள் எவ்விதம் மலைத்துத் திகைத்து இவன் வருகையை எதிர்பார்த்திருக்கிறார்கள். இவன் உருண்டு புரண்டுவிழுந்து எழும்புவதையும், தட்டித்தடுமாறி அகோரவிகாரமாய் விழுந்து தள்ளாடித்தள்ளாடி வீட்டினுள் பிரவேசிப்பதையும் பார்த்துத் தயங்குகிறார்கள். அன்பாய் ஆதரவாய் ஸ்நேகிக்கப்பட்ட குடும்பம் பாழுங் குடியால் பாதவிக்கிறது.

ஓர் கன்னிகை தன் கணவன் மதுவருந்தி, மதிமயங்கி, விகாரரூபமாய் வரும்பொழுது அவனது பிரதிமைப் படமொன்றெடுத்து போஜன வேளையில் அவனுக்குச் சன்மானமளித்தனளாம். இவன் தன் அகோரரூப சாயலைக் கண்ணுற்று வெட்கித்து, இனிமேல் மதுபானம் அருந்துவதில்லையெனப் பிரமாணிக்கமான பிரதிக்கினை செய்து அவ்வாறே நடந்து ஒழுங்காய்ச் சீவித்தானாம். சங். சி. பிரிட்ஜ் என்பவர் இதை "குடியரின் பார்வைக்கண்ணாடி" என்று உணர்த்தி இக்கண்ணாடியை மதுபானிகள் நன்றாய்க் கண்ணுற்று, இவர்களில் துர்ப்பழக்கமாகிய மதுபானத்தை விட்டுவிடுவார்களாக என மிகவும் வற்புறுத்துகிறார்.

வேம்பார், 13—10—20. M. A. P. FERNANDO.

பானந்துறை
அர்ச். வியாகுலமாதா மகோற்சவக் கொண்டாட்டம்.

செல்வம்பொழியும் சிங்கார வனமாகிய சிறப்புற்ற இலங்கை இராச்சியத்தில், கொழும்புக்கு அடுத்த பானந்துறையில், எமக்கு அடைக்கலமும் பாதுகாவலுமாயிருக்கிற அர்ச். வியாகுலமாதாவின் திருவிழாவானது வழக்கம்போல்

நாள்து மாதம் 7உ செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து, 19உ ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்புடன் முடிவானது. 7உ முதல் 17உவரையிலும் அந்தந்த நவநாட்காரர் செலவில் தினமும் மேற்படி தேவாலயமும் பலிபீடமும் பலவர்ணக் கொடிகளாலும் பலநிற புஷ்பங்களாலும் நானுவித பக்திக்குரிய ஜோடினைகளாலும் நூற்றுக்கணக்கான மெழுகுவத்திகளாலும் அலங்கரிக்கப்பட்டு, கீதவாத்தியங்களுடன் தினமும் இரவு 8 மணிக்கு திவ்யநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டதோடு அர்ச். வியாகுலமாதாவின் சுரூப ஆசீர்வாதமும் கொடுக்கப்பட்டுவந்தது.

18உயாகிய சனிக்கிழமை இரவு 7-மணிக்கு எமது ஞானத்தந்தையாகிய சங். பரோன் சுவாமிகளாலும், சங். மில்லினர் சுவாமிகளாலும் சங். மோஸ் சுவாமிகளாலும் (Vespers) என்னும் மாலை ஆராதனை நடத்தப்பட்டு மறுநாள் உதயம் 8 மணிக்கு மேற்படி சங். பரோன் சுவாமிகளால் பெரிய பாடற்பூசை செய்ய, சங். மில்லினர் சுவாமிகள் டீக்கனுகவும், சங். மோஸ் சுவாமிகள் சப்-டீக்கனுகவும் நின்று திவ்யபூசைபலியும் நிறைவேற்றினுர்கள். பூசையின்போது சங். மோஸ் சுவாமிகளால் பக்தியாய் நவநாள் நடத்துகிறவர்கள் அடையக்கூடிய பலனைப்பற்றியும், அர்ச். வியாகுலமாதாவின் வல்லமையைப்பற்றியும் ஜனங்களுக்குப் பக்தி விசுவாசத்தை ஊட்டும்படியான ஓர் சிறந்த பிரசங்கம் செய்யப்பட்டது. பாடுகிறவர்கள் (Choir Master) திருநாளுக்கென்று குறிக்கப்பட்டிருந்த அருமையான பாட்டுகளைத் தம் பாடல்களோடு ஜனங்களுக்கு மனோரம்மியமாய்ப் பாடினுர்கள். பலநூற்றுக்கணக்கான விசுவாசிகள் திவ்யசற்பிரசாதநாதரை உட்கொண்டார்கள். பூசை முடிவில் தேவதோத்திரப் பாடல்களுடன் திவ்யசற்பிரசாத ஆசீர்வாதமும் அருளப்பட்டு, எமது ஞானத்தந்தையாகிய சங். பரோன் சுவாமிகள் அர்ச். வியாகுலமாதா சுரூபத்தை கையிலேந்தினவராக (Stabat Mater) என்னும் லத்தீன் பாடல்களைப் பாடி, கோவிலைச்சுற்றி வழிநெடுக பீரங்கிவெடிகளைப்போலொத்த அதிர்வெடிகள் முழங்க, சுற்றுப்பிரகாரஞ்செய்து அர்ச். வியாகுலமாதாவின் சுரூப ஆசீர்வாதங் கொடுத்தார்கள். இவ்வாறு திருநாள் இனிதாய் முடிவுபெற வெகு சிரமமெடுத்துக்கொண்ட எமது ஞானத்தந்தையாகிய சங். பரோன் சுவாமிகளையும் இந்நகர் பெரியவர்களையும் வர்த்தகர்களையும் பரிசுத்த வியாகுலமாதா ஆசீர்வதிப்பாளாக!

இங்ஙனம்,

22—9—20 வியாகுலமாதாவின் பக்தன்.

வெள்ளி ஜுபிலி.

நீர்வளம் நிலவளம் செல்வவளம் என்கிற திரிவளங்களும் உடையதென அஷ்டதிக்கிலும் அதி புகழ்பெற்றிராநின்றதும், மேக கூட்டங்கள் கர்ச்சித்து உலாவும் மலைகளையுடையதும், சந்தனம், சண்பகம், மந்தாரம், திமிசு, தெங்கு, கமுகு முதலிய விருட்சங்கள்மலிந்த சோலைகளை யுடையதும், மதுகரமகிழ இதழ்கள்விரியும் நந்தனவனங்களையுடையதும், மகா வனப்புவாய்ந்ததும், அஞ்சலென்றவரை ஆதரிக்க தஞ்சமெனக் காரணப் பெயர் பெற்றதுமாகிய இப்பினுங்கின்கண், அர்ச். சவேரியார் ஆலயப் பங்கு விசாரணை குரு ஆசனத்தில் எழுந்தருளியிருக்கும் சங். லூயிஸ் பெரிஷோன் குருசுவாமிகளின் குருப்பட்டாபிஷேக வெள்ளி ஜுபிலி உற்சவம் நிகழும் 1920ஆு செப்டம்பர்மீ 22உ புதவாரம் மகா சிறப்பு அலங்காரத்துடன் கொண்டாடப்பட்டது. நமது சுவாமிகளின் ஜுபிலி மகோற்சவத்தை மிக்க ஆரவாரச் சிறப்புடன் கொண்டாடவேணுமென்று, பினுங்கு தமிழ் கத்தோலிக்கு கிறீஸ்துவர்களின் பேர்பெற்றிலங்கும் அர்ச். சவேரியார் சங்கத்தினர் யாவரும் ஆத்தும குருபக்தர்களாய்த் தோன்றி, விடாமுயற்சியால் எலவே தங்களால் சர்வ முஸ்திப்பும் பூரணமாய் தயாரித்து இருந்தபடியால், ஜுபிலி கொண்டாடப்படும் விஷயத்தை சர்வ ஜனங்களுக்கும் துண்டு பத்திரிகை வாயிலாய்ப் பிரகடனஞ்செய்ய, அதனைக் கண்ணுற்ற பினுங்கிலுள்ள கத்தோலிக்கர் அனைவரும், தொடுவாய் ராஜ்ஜியத்தின் மற்ற பகுதிகளிலுள்ள சகல விசுவாசிகளும் திரள்திரளாய் சுவாமிகளின் ஜுபிலி திருநாளை பெருநாளாகக் கொண்டாடும்பொருட்டு ஆசைமிகுதியால் வந்து கூடினுர்கள். அன்றியும் மலாய் தேசத்தின் மற்றப் பகுதிகளிலும் விசாரணைபுரியும் குருசுவாமிகள் பலரும் பெருங்குழுவாய் எழுந்தருளி இருந்தார்கள்.

பெரிஷோன் குருசுவாமிகளின் வெள்ளி ஜூபிலி மகோற்சவத்தைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசை மிகுதிகொண்டதுபோல் சூரியனும் தனது சகஸ்திர கிரணங்களை விரித்து ஜோதிப் பிரகாசத்தோடு உதயஞ் செய்யவே, ஜூபிலி தினமாகிய 22உ புதவாரம் காலை 7 மணிக்கு, நமது சங். பெரிஷோன் குருசுவாமிகளும், டீக்கன் சப்டீக்கனுக முறையே. சங். எர்மேன் சுவாமிகளும் சங். சுவெட் சுவாமிகளுமாக திருப்பலிபூசை ஆரம்பிக்க, மற்ற குருசுவாமிகளானவரும் இன்ப கான சங்கீத தொனியோடுபாடி பெரிய பாட்டுப்பூசை செய்து (Solemn High Mass) தயா சமுத்திரமாகிய சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது; விசுவாசிகள் சுமார் நானூறு பேருக்கு அதிகமாய் சற்பிரசாத பந்தியில் அமர்ந்து ஆண்டவரை அருந்தி, நமக்காக நமது நல்ல குருசுவாமிகளுக்கு நீடிய ஆயுளையும், போதிய ஞானத்திடனையும் அளித்து ஆதரித்து காப்பாற்றிவரும் நல்ல தகப்பனுகிய சர்வ ஜீவ பிதாவுக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்தார்கள். திருப்பலிபூசை முடிந்தபின் நமது சுவாமிகளின் அரண்மனையில் கூடியிருந்த சகல குரு சுவாமிமார்களும் ஜூபிலி நாயகமாகிய நமது பெரிஷோன் சுவாமிகளுக்கு விரத்தத்துவ அந்தஸ்து முறைப்பிரகாரம் கைலாகுகொடுத்து சுபசோபனம் கூறி அமர்ந்தார்கள். சர்வ கத்தோலிக்கு ஜனங்களும் பெருங்கூட்டமாய்க்கூடி பூமாலை புஷ்பச்செண்டு பாண்டுவாத்தியங்களோடு கிரமப்படி சென்று சுவாமிகளின் திருவடித்தாமரைகளைச் சேவித்து, சுபசோபன மங்களவாழ்த்துப் பண்பாடி சுவாமிகளின் திருக்கர ஆசீர்வாதத்தைப் பெற்று ஆனந்த சந்தோஷத்தில் மூழ்கினர்.

ஏனைய வைபவங்கள் சர்வ ஜனங்களின் சௌகரியத்தினிமித்தம் விடுமுறை நாளாகிய 26உ ஞாயிற்றுக்கிமை கொண்டாடக் கருதி, ஒத்திவைக்கப்பட்டபடியால் ஜனங்கள் யாவரும் பூரண சந்தோஷத்தோடு தந்தம் விடுதிக்கேகினர். அப்பால் அர்ச். சவேரியார் சங்கத்தின் அவையுவங்களின் அபார முயற்சியால் பலவர்ண கொடிகளாலும், பசுமையான பச்சை இலைகளாலும், பலவித பூக்களாலும் தெங்கு கமுகு மா முதலிய தோரணங்களாலும், தேங்கிளநீர் கதலி மா முதலிய குலைகளாலும் சிங்காரிக்கப்பட்டிருந்த அசனசாலையில் இருபது குரு சுவாமிகளுக்கு இரவும் பகலுமாக ஐரோப்பிய பாக முறையில் விருந்தளிக்கப்பட்டதோடு, சங். பெரிஷோன் குருசுவாமிகளால் ஆதரிக்கப்பட்டுள்ள அநாதைச் சிறுவர்களுக்கு அறுசுவை பதார்த்தத்தோடு போஜனம் அளிக்கப்பட்டது.

(இன்னும் வரும்.)

பினங்கு,
23—9—20. S. S. சின்னப்பதாஸ்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரங்களும் குறிப்புகளும்.

மரியாயின் மகா சங்கம்.

நடத்துந் தேதி மாற்றப்பட்டுவிட்டது.- முன்னர் குறித்திருந்த தேதிகளில் கன்னுட் கோமகன் சென்னைக்கு விஜயஞ்செய்யப்போகிறபடியால் அத்தேதி சங்கத்துக்கு சௌகரியப்படாதேன்று, 1921ஷு ஜனவரிமீ 4உமுதல் 6உவரையில் நடத்தப்படவேண்டுமேன்று கமிடியாரால் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. 4உயாகிற செவ்வாய்க்கிழமை சாயந்திரம் ஆரம்பித்து 6உயாகிற வியாழக்கிழமை சாயந்திரம் முடிவு பெறும். இதை நண்பர்கள் எல்லோரும் நன்கு கவனிக்கவேண்டும்.

விஜயஞ்செய்பவர்களுக்கு இருக்கை வசதி.—இதற்காக சென்னையிலுள்ள கத்தோலிக்குப் பாடசாலைகள் முதலிய கத்தோலிக்கு ஸ்தாபனங்களுக்குரிய கட்டிடங்களெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன. குருக்கள் சந்நியாசிகள் முதலியவர்களுக்கு சென்னை மேற்றிராசனக் கோவில், மயிலை மேற்றிராசனக் கோவில்களுக்கு அருகாமையிலுள்ள பாடசாலைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மற்றக் கிறீஸ்துவர்களுக்கு இதர இடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. புருஷன் பெண்சாதி பிள்ளைகளாக குடும்பத்துடன் வருபவர்களுக்கு தனி வசதிகள் கிடையா. ஆனால் ஸ்திரீகளுக்கென்று பிரத்தியேகமான இடங்கள் சவதரிக்கப்படும்.

சாப்பாட்டுக்கான ஏற்பாடுகள்.—இருக்க இடமும் சாப்பாடும் ஆக இரண்டுக்கும் ஒருமிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஜனவரிமீ 4உ-முதல் 7உ-வரையில் ஆக 4 நாட்களுக்குமாத்திரம்தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 4உ-க்கு முன்னதாகவாவது 7உ-க்கு பின்னதாகவாவது இருக்கை, சாப்பாடு முதலிய சௌகரியங்கள் வேண்டுபவர்கள் அவைகளுக்காக தங்கள் சொந்த ஏற்பாடு செய்துகொள்ளவேண்டியது. இருக்கப் படுக்க இடவசதியும் வெளிச்சமும் மாத்திரம் தரப்படுமாதலால், அவரவர்கள் தங்கள் படுக்கைகளையும், துவாலைகளையுங் கொண்டுவரவேண்டியது.

இருக்கைக்கும் சாப்பாட்டுக்கும் சேர்த்து கட்டணம் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

(1) ஐரோப்பியர் ஆசாரப்படி சாப்பாடு வேண்டுபவர்களுக்கு முதல் கிளாஸ் நபர் ஒன்றுக்கு ஒரு நாளைக்கு ரூ 6. 2-வது கிளாஸ் ரூ 4. இவர்களுடைய சௌகரியங்களைக் கவனிக்க வேலையாட்கள் சித்தஞ்செய்யப்படுவார்கள்.

(2) மலையாளத்தார்களுக்குநாளொன்றுக்கு நபருக்கு முதல் வகுப்பு ரூ 3. 2-வது வகுப்பு ரூ 1—8.

(3) தமிழர், தெலுங்கர் முதலியோருக்கு நபருக்கு நாளொன்றுக்கு ரூ 2. முதல் வகுப்பு 2-வது வகுப்பென்று இவர்களுக்கு இல்லை. எல்லாம் ஒரே வகுப்புதான்.

(விவரம்.—காலையில் காப்பி ரொட்டி, அல்லது ஆப்பம், வாழைப்பழம், நெய் சர்க்கரையுடன். பகலில், கறி குருமா, வறல், பருப்பு; நெய், ரசம், மரக்கறி பொரியல், கூட்டு சட்னி, துவையல் முதலியவை. இரவில் மீன் அல்லது முட்டை, குழம்பு பொரியல், ரசம், துவையல் முதலியவை).

சங்கக்கூட்டங்கள், சங்க சம்பந்தமான ஆராதனைகள் இவைகளுக்கு உள்ளே போக பிரவேச சீட்டுகளுக்குக் கட்டணம் நான்கு வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் வகுப்பு ரூ 5. 2-வது ரூ 3. 3-வது ரூ 1. 4-வது அணா 8. இந்தக் கட்டணம் கட்டி டிக்கட்டு பெற்றிருப்பவர்கள். இந்த மரியாயின் மகா சங்க சம்பந்தமாய் மூன்று நாட்களிலும் நடைபெறும் எல்லா கூட்டங்களுக்கும், ஆராதனைகளுக்கும் சடங்குகளுக்கும் போகலாம்.

டிக்கட்டுகள் முன்னதாகவே பெறவேண்டும்.—சாப்பாட்டு டிக்கட்டுகள் வேறு, கூட்டங்கள் டிக்கட்டுகள் வேறு. இவையிரண்டுக்கும் மேற்குறித்தபடி தனித்தனிக் கட்டணங்கள் கட்டி டிக்கட்டு பெறவேண்டும். டிக்கட்டுகள் வேண்டுபவர்கள் அவைகளுக்குரிய வீதப்படி மொத்த பணத்தை இம்மாதம் அதாவது நவம்பர் மாதம் 15-ந் தேதிக்குள் பின்கண்ட விலாசத்துக்கனுப்பிக்கொள்ளலாம்

"மரியாயின் மகா சங்கத்தின் உபசரிப்புக் கமிட்டி காரியதரிசிகள். ஆர்மேனைக்காரத் தெரு, 2-ம் நம்பர், மதராஸ்."

மரியாயின் மகா சங்கக் கோண்டாட்டத்தைப்பார்க்க விரும்புகிறவர்கள் செலவழிக்கவேண்டிய தொகையின் தோராயமான மதிப்பு :—

(1) ஐரோப்பிய சாப்பாடு வேண்டுபவர்களுக்கு,

4 நாள் சாப்பாடு ...	24	0	0
கூட்டத்துக்கு டிக்கட்டு ...	5	0	0
2-வது வகுப்பு ரெயில்வே செலவு வரப்போக ...	50	0	0
சில்லரைச் செலவுகள் ...	21	0	0
	100	0	0

(2) தமிழர், தெலுங்கர் முதலியோர்களுக்கு,

சாப்பாடு டிக்கட்டு ...	8	0	0
கூட்டத்துக்கு டிக்கட்டு ...	3	0	0
ரெயில்வே செலவு ...	20	0	0
சில்லரை செலவு ...	9	0	0
	40	0	0

ரெயில்வே செலவு அவரவர்கள் ஊருக்குத் தகுந்தபடியாகும். தூக்குத் தொகையாக தூத்துக்குடி, திருநெல்வேலி முதலிய தென்னாட்டிலிருந்து வருபவர்களை யுத்தேசித்து மேற்படி குறிப்பு போடப்பட்டது. எல்லா செலவையும் கவனிக்கும்பட்சத்தில்

குறைந்தது ரூ. 50. மரியாயின் சங்க செலவு என்று எடுத்துவைக்கவேண்டும்.

மரியாயின் மகா சங்கக்கூட்டங்களில் நடக்கப்போகும் பிரசங்கங்கள், வியாசங்களின் விஷயம் பின்வருமாறு :—

I "மரியாயி தேவதாயார்."

(a) அமலோற்பவம். ஆபத்தம். (பிரசங்கம்)

(b) சாங்கோபாங்க சீவியம். அவளுடைய புண்யக்கிரியைகள், தேவ இஷ்டப்பிரசாதங்கள், வரங்கள் முதலியன. (பிரசங்கம்)

(c) மரியாயின் வல்லபமும், மகிமையும். (பிரசங்கம்)

II "மரியாயி, மனுமக்களின் மாதா." மனுமக்களுக்கும், அவளுக்கும் உள்ள தொந்தம் ; அவர்கள் அவள்மட்டில் அனுசரிக்கவேண்டிய கடமைகள். (பிரசங்கம்)

III "மரியாயியும், கத்தோலிக்கர் சீவியமும்."

1. கத்தோலிக்கர் இல்லம். (முதல் வியாசம்)
2. கத்தோலிக்கரின் ஆரம்பக் கல்வி. (2-வது ஷை)
3. கத்தோலிக்குச் சிறுவர்களின் கல்வி. (3-வது ஷை)
4. கத்தோலிக்குச் சிறுமிகளின் கல்வி. (4-வது ஷை)
5. பள்ளிக்கூடங்களில் நல்லொழுக்கப் போதனை. (5-வது ஷை)

IV "பரிசுத்த கன்னிமரியாயின் சபைகள்."

(1) பாடசாலைகளில் மரியாயின் சபைகள். அவைகளினால் உண்டாகும் நன்மைகள். (6-வது வியாசம்)

(2) பங்கு விசாரணைக் கோவில்களில் மரியாயின் சபைகள். (7-வது ஷை)

(3) மரியாயின் சபைகளை ஒருங்கு சேர்த்தல். (8-வது ஷை)

V "மரியாயும், கத்தோலிக்கு நற்கிருத்தியங்களும்."

(1) இந்திய கத்தோலிக்கு சத்தியாபிமான சபை. (9-வது வியாசம்)

(2) கத்தோலிக்கு இலக்கியங்களும் அச்சியந்திரசாலையும். (10-வது ஷை)

(3) ஜெப அப்போஸ்தல சபை. (11-வது ஷை)

(4) ஞான ஒடுக்கங்கள். (12-வது ஷை)

(5) ஞானோபதேசமும், உபதேசிமார்களைப் படிப்பித்தலும். (13-வது ஷை)

(6) தேவ ஊழியத்துக்கு அழைக்கப்படுபவர்களை ஆதரித்தல். (14-வது ஷை)

(7) கத்தோலிக்கு தரும வைத்தியசாலைகள். (ஸ்திரீகளுக்குள் வைத்திய வேலை) (15-வது ஷை)

VI "மரியாயும், இதர மதஸ்தரும்."

(1) மரியாயி எவ்வகையில் இதர மதஸ்தருடைய மாதாவாயிருக்கிறாள். அவர்களை சத்தியவேத மந்தைக்குள் கொண்டுவந்து சேர்க்க அவளுக்குள்ள ஆவல். (16-வது ஷை)

(2) அஞ்ஞானிகள், பதிதர், பிரிவினைக்காரராதியோரை மனந்திருப்பும் வழிவகைகள். (17-வது ஷை)

(3) இந்தியாவின் மனந்திரும்புதல் வேலை செய்ய மரியாயின் ஆதரணையில் ஒரு மத்திய சங்கம் ஸ்தாபித்தல். (18-வது ஷை)

மேசபொட்டேமியா. — இந்நாட்டிலுள்ள கலகத்தையடக்கி, அமைதியை நிலைநிறுத்திய பிறகு, பிரிட்டிஷ் ஆதாவின்கீழ் அராபியர்கள் ஒரு ராஜ்ஜியத்தை ஆண்டுகொள்ளும்படி விட்டுவிடவேண்டுமென்று பிரிட்டிஷார் உத்தேசித்திருக்கிறதாகத் தெரியவருகின்றது.

கண்ணம்பாடி அணை.—இந்த அணை விஷயமாய் சென்ற சில காலமாய் நடந்துவந்த விவாதமானது மைசூர் கவர்ன்மெண்டாருக்கு அநுகூலமாய் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. ஆனால் அத்தீர்மானத்தின் விவரம் இன்னம் நமக்கெட்டவில்லை. இதனால் தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களிலுள்ள மிராசுதாரர்களின் உரிமைகளுக்கும் பாதக மேற்படும் போலும்.

இங்கிலாந்தில் வேலை நிறுத்தம்.—இங்கிலாந்திலுள்ள சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கிறார்கள். 17½ லட்சம் ஜனங்கள் வேலையில்லாதிருக்கிறார்

கள். இவர்கள் குறைந்தது ஆறு மாதமாவது பிடிவாதஞ்செய்வார்களென்று நம்பப்படுகிறது. நிலக்கரியின் விலை அபாரமாய் ஏறிவிடுமென்று அஞ்சப்படுகிறது. இந்த வேலை நிறுத்தம் விஷயமாய் தக்க ஏற்பாடு செய்கிறவரையில் இங்கிலாந்து முழுவதிலும் ஒரு டன் கரிகூட தோண்டப்படாதாம்.

அயர்லாந்தில் சுயராஜ்ஜியக் கலகம்—இது நாளுக்கு நாள் மும்முரமாகிக்கொண்டு வருகிறது. சென்ற ஜனவரி முதற்கொண்டு 100 போலீஸ்காரர்களும், 18 சோல்ஜர்களும் கொல்லப்பட்டார்கள்; 160 போலீசாரும், 66 ராணுவஸ்தர்களும் காயமடைந்தார்கள். 667 போலீஸ் கச்சேரிகள் தாக்கப்பட்டன. கலகஞ்செய்ததற்காக கைதி செய்யப்பட்டு காராகிருகத்தில் வைக்கப்பட்டிருக்கும் மிஸ்டர் பாக்ஸ்வினியை விடுதலை செய்யமுடியாதென்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இவர் 68 நாள் பட்டினியிருந்திருக்கிறார். அவர் மெத்த பலஹீனமாய் இருக்கிறதாகவும், அவருக்கு ஜலதோஷம் பிடித்திருக்கிறதாகவும் சொல்லப்படுகிறது. மிக்கேல் பிட்ஸ்ஜெரல்டு என்னும் 30 வயதுடைய வேறொருவர் 68 நாள் பட்டினி கிடந்து 68-ம் நாள் உயிர்துறந்தனராம், கார்க் நகரத்தின் லார்டு மேயரான மிஸ்டர் மாக்ஸ்வின்னி, 74 நாட்களாக பட்டினிவிரதமிருந்து, கடைசியாக சென்ற அக்டோபர் மீ 25உ பிரக்ஸ்டன் சிறைச்சாலையில் இறந்துவிட்டாராம். என்னே இவர்களது வைராக்கியம்?

கிறீஸ்மஸ் சாமான்கள்.—கத்தோலிக்கு வேத படங்கள், சுரூபங்கள், சாமான்கள் முதலியவைகளில் பெரும் வியாபாரம் செய்யும் நமது கொழும்பு நண்பர் ஸ்ரீமாந் எக்ஸ். பி. பாய்வ இவ்வருஷம் பல்வேறுபட்ட நூதன அரிய சாமான்களை ஜெர்மனியிலிருந்து வரவழைத்து, விற்பனைக்குத் தயாராக வைத்திருக்கிறார். இந்தச் சாமான்களின் படம்போட்ட ஜாபிதா இம்மாத சஞ்சிகையின் அநுபந்தமாக அநுப்பப்பட்டிருக்கிறது. அதனை வாசிப்போர் அனைவரும் அதில் கண்டுள்ள சாமான்கள் ஒவ்வொன்றையும் வாங்கி யுபயோகிக்க ஆசை கொள்ளாமற் போகார். ஏனெனில், அதில் கண்டுள்ள சாமான்கள் எல்லாம் சமீபத்தில் வரவிருக்கிற கர்த்தர் ஜனன மகோற்சவத்தைக் கொண்டாடுவதற்கு ஏற்றவைகளாயும், மனோரம்மிய முள்ளவைகளாயும், வாங்கவேண்டுமென்னும் வேகமான ஆசையைத் தூண்டுகிறவைகளாயுமிருக்கின்றன. அவைகளின் விலைகளும் மெத்த குறைவானவைகளாகவே காணப்படுகின்றன. சுவாமி பிறந்த படங்கள் சுரூபங்களென்ன, தேவமாதா, சூசையப்பர், அந்தோனியார் முதலிய அர்ச். வர்களின் படங்கள், சுரூபங்களென்ன, கிறீஸ்மஸ், நியூ யியர் விசித்திரக் கார்டுகளென்ன, காலன்டர்களென்ன, அலங்கார விளக்குகளென்ன, மாலைகளென்ன, வெகுமதிக்குரிய அரிய மற்ற சாமான்களென்ன, அவைகளைத் தக்கவிதமாய் விவரித்தெழுதக் கூடாதவையாயிருக்கின்றன. வேண்டியவர்கள் முன்னதாகவே ஆர்டர் கொடுத்து வரவழைத்துக்கொள்வார்களாக. தாமதித்தால் "இல்லை, மிஞ்சிப் போயிற்று" என்ற விடைவரும். ஆகையினால் முந்திக்கொள்வது நலம்.

வாழைப்பழத்தின் அரிய குணம்.—வாழைப்பழம் அதிகமாய்த் தின்பவர்களுக்கு மூளையின் சக்தி அதிகரிக்கிறதென்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் வேலையில் மிகப் பிரசித்திப்பெற்ற மான்செஸ்டர் பட்டணத்திலுள்ளோர் வாழைப்பழம் மிகுதியாய் சாப்பிடுகிறார்களாம்; ஆகையினாற்றான் அவர்கள் கைத்தொழில் வேலைகளில் மிக புத்தி நுட்பமான வேலைகளைச்செய்து உலகமெங்கும் புகழ்பெற்றிருக்கிறார்கள். சமீபத்தில் பிரிட்டிஷ் சங்கக் கூட்டமொன்றில்: மிஸ் வி. ஹாஸ்விட் என்னும் மாதாரள் "எலியும் வாழைப்பழமும்" என்பதை மகுடமாகக் கொண்டதோர் உபந்நியாசஞ்செய்து, வாழைப்பழம் தின்னும் எலிகள் மற்ற எலிகளைவிட அதிக தந்திரமுடையதாகக் காணப்படுகின்றனவென்று நிரூபித்துக் காட்டினார். இந்தியாவின் விளைப்பொருளாகிய வாழைப்பழத்தை விசேஷமாய்ப் புசிக்கிறவர்கள் அது புத்தி நுட்பந்தருகிறது என்கிற விஷயத்தைப் பற்றி திருப்தியடையலாம். ஆயினும், வாழைப்பழத்தை அதிகமா யுபயோகித்து அது உண்டாக்குவதாகச் சொல்லப்படுகிற "மூளை சக்தி" உண்டாகிறதாவென்று அவரவர்கள் பரிட்சித்துப் பார்த்துக்கொள்ளலாம்.

இந்தியாவுக்கு அந்நிய குருக்குள்.—பிரிட்டிஷ் குருக்களைத் தவிர இதர அன்னிய தேச குருக்கள் இந்தியாவுக்குள் பிரவேசிக்கப்படாதென்று யுத்தத்திற்குப் பிறகு ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இப்போது அமெரிக்கா சிக்காகோ விசாரணையைச் சேர்ந்த சங். கெல்லி சுவாமிகளின் முயற்சியால் அமேரிக்க குருக்கள் தாராளமாய் வரலாமென்றும், ஜெர்மன் ஜாதி கலப்புள்ள குருக்களையும், தேசப்பிரஷ்டஞ் செய்வித்த சந்நியாசிகள், கந்நியாஸ்திரிகளையும் இன்னும் ஒரு வருஷந்தனையும் நிறுத்திவைக்க வேண்டுமென்றும் உத்தரவாயிருக்கிறது.

க்ஷயரோகத்துக்கு சுலபமான மருந்து.—தேங்காய்ப்பாலை தினந்தோறும் சாப்பாட்டில் உபயோகப்படுத்தி அதன் எண்ணெயை தேகத்தில் சிரசில் தேய்த்துக்கொண்டுவந்தால் க்ஷயரோகமென்னும் காசவியாதி நீங்கிப் போகிறதென்று ஒரு பண்டிதர் பகருகிறார். பசும்பாலுக்குப்பதில் தேங்காய்ப்பாலையும், நல்லெண்ணெய்க்குப்பதில் தேங்காயெண்ணெயையும் உபயோகப்படுத்திவந்தால் தித்திப்பு நீர் என்னும் மதுமேக ரோகம் நீங்கிவிடுகிறதென்று இன்னொரு டாக்டர் சொல்லுகிறார். தேங்காய்க்கு மேக சாந்தி செய்யுங் குணமுண்டு. இத்தேங்காயையே சகல விதத்திலும் உபயோகித்து வரும் மலையாளவாசிகளுக்கு ஷை யிரண்டு வியாதிகளும் பெரும்பாலும் வருவதில்லையாம்.

பேசினால் பலக்குறைவு.—அதிகம் பேசினாலும்சரி, உரக்கக் கூவிப்பேசினாலும்சரி, பேசும் அல்லது கூவும் அளவுக்கு தேகபலம் குறைவடைகிறதாம். ஒரு மணித்தியாலம் சம்பாஷணைபுரிகிற இருவர் தங்கள் சம்பாஷணையால் நிமிஷம் ஒன்றுக்கு, 4 பவுன் பாரத்தைத் தூக்கும் பலத்தை யிழந்துவிடுகிறார்கள் என்று ஒரு பிரெஞ்ச் டாக்டர் கண்டுபிடித்திருக்கிறார். இப்படி அளவுக்கும், அவசியத்துக்கும் மிஞ்சிப் பேசுவதால் தேகபலம் குறைகிறதுமல்லாமல், "பேசப் போகிறாயோ சாகப்போகிறாயோ" "பேச்சு வெள்ளி, பேசாமை பொன்" என்றிருத்தலால் தனக்கும் பிறருக்கும் துன்பம் விளைவிக்கவும் ஹேதுவாகும். ஆனதுபற்றி, அவசியமானபோது சுருக்கமாய்ப் பேசி மௌனமாயிருப்பது நல்லது.

தண்ணீர் அருந்தவேண்டிய அளவு.—ஒரு மனுஷன் காலைச் சாப்பாட்டுக்குப்பின் உழக்கு ஜலம், பகல் சாப்பாட்டுக்குப்பின் உழக்கு ஜலம், இராச் சாப்பாட்டுக்குப்பின் உழக்கு ஜலமாக ஒருநாளைக்கு முக்காற்படி ஜலந்தான் சாப்பிட வேண்டுமாம். இந்த அளவுக்குமேலும், இடையிலும் எந்தவித பானமும் செய்யக்கூடாதென்றும், அப்படிச் செய்வது வியாதிக் கடையாளமென்றும் வைத்திய சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். உணவு உட்கொண்டிருக்கும்போது மத்தியில் தண்ணீர் சாப்பிடலாகாது; சாப்பிட்டு அரைமணிநேரம் பொறுத்துத்தான் ஜலங் குடிக்க வேண்டுமென்றுஞ் சொல்லுகிறார்கள்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

மோ.

எமதரிய நண்பர்களுக்கு துயரத்துடன் தெரிவிப்பதாவது:—பரமகடவுளின் தயவால் கிடைத்த அரிய செல்வப்புத்திரனாகிய ஞானப்பிரகாசம் தனது 5-ம் மாதத்தில், தாய்தந்தையரும் மாமன், பாட்டி, சகோதரர்களும் துயரமுற்றுப் புலம்ப, 1920ஞு செப்டம்பர்மீ 3உ பரலோக பாக்கிய சந்தோஷத்தில் மூழ்கினன்.

பாலனை இழந்த பரிதாபி
பிரான்சிஸ் டேவிட்.

நாகப்பட்டணம்.

ஐயா, எனது அருமை மனைவியும், சத்திய வேதானுசாரப் பத்திராதிபரான மாஜி. ம. சா. இயாகப் பிள்ளை சிரேஷ்ட குமாரத்தியுமான அன்னு குழந்தையம்மாள் சிலகாலமாக வியாதியாயிருந்து, எவ்வித சிகிச்சைசெய்துங் குணப்படாமல் நாளது ஞு அக்டோபர்மீ 23உ சனிக்கிழமை காலை 10 மணிக்கு சகல தேவத்திரவிய அநுமானங்களையும் பெற்று பரலோகபிராப்தியடைந்தனள். அவளுடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளக் கோரும்,

நிர்ப்பாக்கியன்
ஆ. பிரபலநாத பிள்ளை,
(ரிடையர்ட் சப் ரெஜிஸ்ட்ரார்),
23—10—20. மஜுரூ கம்பெனி